
தமிழரசு
1-9-1976 50 காசு


வளமான
வாழ்விற்கு....
நாடு நலம் பெற
வீடு வளம் பெற
அரிய பெரிய திட்டங்கள்
அரசு நிதம் தீட்டுகிறது.
திட்டங்களின் இனிய பலன்
எட்டிடவே எல்லோர்க்கும்
அளவான குடும்பம்
அமைவதுதான் சிறப்பாகும்!
பிறந்ததைக் காப்போம்!
பிறப்பதைத் தவிர்ப்போம்!!
சாமி
குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு.

# தமிழரசு

1-9-1976

மலர் : 7 இதழ் : 5



## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| நாட்டின் வளங்களை முழுமையாகப் பயன் படுத்துவோம்! ... | 2 |
| சமூக நலத் திட்டங்கள் வெற்றி பெற... | 9 |
| கை கொடுக்கும் மருத்துவம் ... | 13 |
| நீர்வளம் பெருக்கி நிலவளம் பெருக்கு வோம்! ... | 17 |
| கிராமப்புற வளர்ச்சியில் சமுதாய நோக்குடைய காடுகளின் பங்கு ... | 18 |
| தொட்டியிலும், மரப்பெட்டியிலும், மாடியிலும் காய்கறி பயிரிடலாம் ... | 21 |
| படமும் செய்தியும் ... | 24 |
| சோமங்கலம் ஊரக அபிவிருத்தித் திட்டப் பணிகளில் கால்நடைத் துறையின் பங்கு. | 30 |
| சென்னையில் அமுதம்! ... | 33 |
| நாதியற்றுக் கிடந்த 24,000 பேர்களுக்கு நல்வாழ்வு பிறந்தது! ... | 41 |
| உழவர் பெருமக்களுக்கு உதவும் செய்திகள் | 47 |




# நாட்டின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவோம்!



இந்தியாவின் 30-வது சுதந்திர தினத்தை யொட்டி புதுடில்லியிலுள்ள செங்கோட்டையில் 15—8—1976 அன்று, நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

"இன்று போல் என்றுமே இந்தியா வலிமை மிக்கதாக இருந்ததில்லை. நாம் கண் காணிக்க வேண்டியதெல்லாம் நம்மிடமுள்ள வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி நமது மக்களும் நாடும் இன்னும் அதிக வேகத்தில் முன்னேற்றம் அடையச் செய்வதுதான்'' என்று பிரதம மந்திரி, திருமதி இந்திரா காந்தி அவர்கள்,

இந்தியாவின் சுதந்திர தினத்தையொட்டி புது டில்லியிலுள்ள செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து 15-8-1976 அன்று காலை, நாட்டுக்கு உரை நிகழ்த்தினர்.

''சோனியின் வலிமை'' என்ற குருதேவர் தாகூரின் வாசகத்தை அவர் நினைவுகூர்ந்து, உறுதியுடனும் ஒற்றுமையோடும் திடச்சித்தத்துடனும் செயல்பட்டால் வலுவற்றவர்கள் கூட ஒரு மகத்தான சக்தியாக உருவாகலாம் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் இந்தியில் ஆற்றிய உரையின் மொழியாக்கம் வருமாறு:—

''நான் இங்கு தேசியக் கொடியைப் பறக்கவிடும் ஒவ்வொரு சமயத்திலும், ஜவாஹர்லால் நேரு, முதல் தடவையாகச் சுதந்திர இந்தியாவின் தேசியக் கொடியை இங்கு ஏற்றியது என் நினைவுக்கு வருகிறது. நாடு அடைந்த துன்பங்களும் புரிந்த தியாகங்களும், ஆசைகளும் என் நினைவுக்கு வருகின்றன. அவற்றின் மூலமாகவே தேசியக் கொடியை நாம் இங்கு பறக்க விட்டோம்.

**நாம் நடந்து வந்த பாதை!**

கடந்த ஆண்டுகளை நாம் திரும்பிப் பார்க்கும்போது, நமக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட பாதையில் நாம் நீண்ட தூரம் வந்திருப்பதைக் காணுகிறோம்.

''வழியில் நாம் தவறுகள் புரிந்தோம்; குறைபாடுகளும் இருந்தன. நாம் முன்னேற்றமடைந்தபோது, இன்னும் நீண்ட தூரம் நாம் கடக்க வேண்டியிருப்பதை உணர்ந்தோம். ஒவ்வொரு அடி முன்னேறியபோதும், நமது கஷ்டங்கள் குறைவதற்குப் பதில் அதிகரித்தன! நாம் சில தேவைகளைச் சமாளிக்க முடிந்தது. புதிய தேவைகள் அவ்விடங்களை நிரப்பியதையும் நாம் கண்டோம். வாழ்க்கை அப்படித்தான்! எனினும், நமது மாபெரும் தலைவர்கள் நமக்கு முன்பும் நாட்டுக்கு முன்பும் வைத்துள்ள இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு நாம் முயற்சித்துள்ளோம்.

**விடுதலையின் பொருள்**

"விடுதலை, பலவகையானது. நாம் விழிப்புணர்வோடு போராடி, முழு சுதந்திரத்தை

## பிரதமர் உரை

யும் வெற்றி கொண்டோம். இது சரியானதே; ஏனெனில், வேறு எந்த விடுதலையையும் உண்மையான விடுதலையாகக் கூறமுடியாது. முழுமையான சுதந்திரம் என்பதற்கு, உங்கள் சொந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது மட்டுமே அர்த்தமல்ல. அல்லது செய்திப் பத்திரிகைகள், தாம் விரும்பும் எதையும் வெளியிடுவதற்காக மிகச் சிலரின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதும் அதற்குப் பொருளல்ல. விடுதலை என்பது, அதன் பலன்கள் ஒவ்வொரு இந்தியக் குடும்பத்தையும் எட்ட வேண்டும் என்பதையும், தங்களின் தேவைகளை எடுத்துக் கூற இயலாத, தங்களின் விருப்பத்தை முழுமையாகக்கூட உணராத, இதுவரையில் புறக்கணிக்கப்பட்ட பிரிவினராக இருக்கும் மக்களை அந்தப் பலன்கள் சென்றடைய வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறது. அத்தகைய ஒரு 'ஸ்வராஜ்யத்தை' நோக்கி நமது நாட்டை வழி நடத்திச் செல்ல நாம் முயற்சி செய்து வருகிறோம்; ஆனால் இந்த மார்க்கத்தில் பல தடைகள் உள்ளன. இந்தப் பாதையில் நாம் எதைச் செய்தாலும் அது சில வகுப்பினர், சில குழுவினர் அல்லது சில தனிநபர்களின் நலத்தைச் சிறிதளவு புண்படுத்துகிறது. இப்பூமியில் உயர்ந்தவராக இருந்தாலும் தாழ்ந்தவராக இருந்தாலும் ஒவ்வொரு இந்தியரின் வாழ்க்கையையும் மேம்படுத்துவதற்கு நாம் விரும்புகிறோம். ஆனால், இருப்பவர்கள் மேலும் மேலும் பெற்றுக் கொண்டே போனால் இல்லாதவர்களுக்கு நாம் எப்படி எதையும் அளிக்க முடியும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். எனவேதான், நமது திட்டங்கள், எல்லாருக்கும் பயனளிக்கும் அதே நேரத்தில் குறிப்பாக சமுதாயத்தின் பலவீனப் பிரிவு மக்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு காரணங்களினால் அவர்கள் பலவீனமடைந்திருக்கலாம். அவர்களின் ஜாதியோ, அவர்களின் பொருளாதார நிலைமையோ அல்லது நாட்டின் வளர்ச்சி குன்றிய சில பிராந்தியங்களை அவர்கள் சேர்ந்தவர்கள் என்பதோ அதற்குக் காரணமாக இருக்க முடியும். ஒவ்வொரு படியிலும் நாம் ஒன்றை அல்லது மற்றொன்றைச் சமாளிக்க வேண்டியுள்ளது. இருந்தபோதிலும் அவற்றினால் நாம் தடுமாற வில்லை. கடந்த ஓராண்டுக் காலத்தில் நாடு அடைந்துள்ள பிரம்மாண்டமான முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவதற்கு உண்மையில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

### நாட்டின் வளர்ச்சி !

"நாங்கள், மக்களுக்கு முன்னால் திட்டம் ஒன்றை வைத்தோம். அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தின் பங்கில் சில கடமைகளும், மக்கள் ஆற்ற வேண்டிய சில கடமைகளும் இருந்தன. அது, ஒழுங்குக் கட்டுப்பாட்டை உருவாக்கியது; மக்களின் இதயங்களில் நம்பிக்கை வித்தை ஊன்றியது; மக்கள் அனைவரும் ஒத்துழைத்தார்கள். நிறைவேற்றப்பட வேண்டியது அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவோ அல்லது நாம் சாதிப்பதற்காக விரும்பி நிர்ணயம் செய்த இலக்கை அடைந்துள்ளதாகவோ கூறமாட்டேன். அத்தகைய நிலைமை இல்லை. இன்னும் உறுதியான, சக்திவாய்ந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. சம அளவில் இல்லாவிட்டாலும் எல்லா இடங்களில் இந்தச் செயல் முறை நடைபெறுகிறது. மக்கள் விழிப்போடும், தொழிலாளர்கள் வலிமையோடும் இருக்கும் இடங்களிலெல்லாம் பணி விரைவாக முன்னேற்றமடைந்துள்ளது. உற்பத்தி உயர்ந்திருப்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிந்திருப்பீர்கள். சுமார் ஏழு சதவிகித வளர்ச்சி வேகத்தை நாடு எட்டியுள்ளது.

### நமது தவறுகளைச் சரி செய்யும் வழி

"ஏழைகளுக்கு வீடுகள் வழங்கும் திட்டம் ஒன்றை நாங்கள் துவக்கினோம்; 70 இலட்சம் மக்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மின் சக்தி உற்பத்தி 2,000 மெகாவாட் அதிகரித்துள்ளது. நமது நீர்ப்பாசனத் திட்டங்கள் நல்ல முன்னேற்றமடைந்துள்ளன; வருங்காலத்தில் இன்னும் சிறப்பாக, நம்பிக்கையுடன் பணி புரிவோம். எனினும் நிலச்சீர்திருத்தத்திட்டம் விரும்பிய அளவுக்கு முன்னேற்றமடையவில்லை. அது ஒரு புதிய திட்டமல்ல; பழையதுதான். ஆனால், அத்திட்டத்தை நாம் எடுத்துக்கொள்ளும் போதெல்லாம், நிலம் மறுபடியும் பகிர்ந்தளிக்கப்படுகிற இடங்களிலெல்லாம் புதிய பிரச்சினைகள் முளைக்கின்றன. தொலைதூர இடங்களில் நடப்பவற்றை நாம் கண்காணிக்க

## தமிழ்நாட்டில் பசுவதை தடை !

தமிழ்நாட்டில் பசுவதை தடை செய்யப்படுகிறது. பசுவதையைத் தடை செய்ய வேண்டும் என்று கோரி, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்தன. பசுவதை காரணமாக கிராமங்களில் வசிக்கும் சிறிய விவசாயிகளுக்கு கிடைக்கும் உபரி வருமானம் குறைவதுடன், பால் கொடுக்கும் மாடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு கிடைக்கக்கூடிய மாடுகளின் எண்ணிக்கையும் குறைகிறது. மேலும் சாணி உரம் கிடைப்பதும் குறைகிறது.

ஆகவே, பால் உற்பத்தியை அதிகரிக்கவும், கிராமப் பொருளாதாரத்தை முன்னேற்றவும் பசுவதையைத் தடை செய்யவேண்டும் என்று அரசு கருதுகிறது. ஆகவே, பசுக்களையும், கிடாரிக் கன்றுகளையும், வதை செய்வதை அரசாங்கம் தடை செய்து உத்தரவு போட்டுள்ளது.

இந்த தடை உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருகிறது.

## ஜனநாயகமும் தேர்தலும்!

தேர்தல்களைக் கைவிடும் எண்ணமே கிடையாது, ஆனால் ஜனநாயகத்தில் தேர்தல் நடத்துவதோடு எல்லா அலுவல்களும் முடிவடைந்து விடுவதில்லை. நாட்டு நலன், நாட்டு ஒற்றுமை, எதிர்ப்பு அல்லது போராட்டத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான திறன், அதிக உற்பத்திக்கான திறமை, மேலும் சிறந்த முறையில் உற்பத்திப் பண்டங்களை விநியோகிப்பது போன்ற அம்சங்களை நாம் ஒதுக்கி விட முடியாது. ஜனநாயக முறை இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதற்காகவோ அல்லது தேர்தலை நடத்த வேண்டும் என்பதற்காகவோ இந்த அம்சங்களை ஒதுக்கித் தள்ளிவிடக் கூடிய சூழ்நிலை உருவாக நாம் அனுமதிக்கக் கூடாது.

—இந்திரா காந்தி

முடியாது. தவறுகள் இழைக்கப்படும் நேரங்களில் மக்களும் எங்களுக்குத் தெரிவிப்பதில்லை. இதையெல்லாம் நான் அறிவேன். அதனால் தான், ஒவ்வொரு ஆண்டும் இங்கேயோ அல்லது வேறு எந்த இடத்தில் நான் பேசிய போதிலும், குடிமக்கள்—அவர் விவசாயியோ, அல்லது தொழிலாளரோ- அல்லது ஏழை மனிதரோ யாராயினும் சரி—எந்த இடத்தில் அநீதி நடைபெற்றாலும் அது குறித்துப் புகார் செய்வதன் மூலமாக மட்டுமல்லாமல் எங்கு என்ன தவறு நிகழ்ந்து விட்டது என்று நினைவுறுத்துவதன் மூலமும் அத்தவறை எங்களின் கவனத்துக்குக் கொண்டுவரத் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது அவசியம் என்று மக்களுக்கு வலியுறுத்தி வருகிறேன். இவ்வாறு நாம் இருவருமாக நமது தவறுகளைச் சரிசெய்ய முடியும். இந்த வழியில் மக்களும் இப்பொழுது அதிகமாகச் சிந்தித்து வருகிறார்கள்.

### இந்தியாவின் வலிமை கூடியுள்ளது!

''கடந்த ஆண்டு பொதுமக்களின் விழிப்புணர்ச்சியும் மக்கள் அளித்த ஒத்துழைப்பும் முன்னெப்போதும் இருந்திராத அளவு மிக அதிகமானவை. அதற்கு முன்பு ஒன்றுமே செய்யப்படவில்லை என்று நான் சொல்லவில்லை. நீண்ட காலம் முன்பே உறுதியான அஸ்திவாரங்களை நாம் நாட்டியிராவிட்டால், கடந்த ஆண்டில் விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் இதுபோன்ற முன்னேற்றத்தைச் சாதித்திருக்க முடியாது. ஆனால், ஒழுங்குக் கட்டுப்பாடும், மக்கள் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால் அந்த அஸ்திவாரம் மட்டுமே இந்தியாவின் தோற்றத்தை மாற்றுவதற்குப் பயன்பட்டிருக்காது என்பதும் உண்மை. பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், தொழிற்சாலைகளிலும், தெருவீதிகளிலும்-எல்லாவிடங்களிலும் கட்டுப்பாடின்மை தலைவிரித்தாடியதை நீங்கள் நினைவு கூரலாம். பொருளாதாரக் கஷ்டம் நிறைந்திருந்த காலத்தில் வேலை நின்றுவிட அது வழிகோலியது. அத்தியாவசியப் பண்டங்களுக்கு அப்போது தட்டுப்பாடு இருந்தது. உற்பத்தி நின்றுவிட்டதன் காரணமாக அப்பொருட்களின் தட்டுப்பாடு மேலும் அதிகரித்தது. கதவடைப்பு, புரட்சி ஆகிய கோஷங்கள் எங்கும், எதிரொலித்தன. புரட்சியில் எங்களுக்கும் நம்பிக்கை உண்டு. மாபெரும் புரட்சிவாதியாகக் கருதப்பட்ட காந்திஜியும் புரட்சியைத் துவக்கினார். ஆனால் அமைதி, நட்புறவு அடிப்படையிலான வன்முறையற்ற வகையில் அப்புரட்சி நடைபெற்றது. அவருடைய வழியிலிருந்து தவறியிருந்தாலோ அஞ்சா நெஞ்சம் மிக்க ஒரு சில தலைவர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தாமலிருந்தாலோ, நாடு இன்னமும் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்திருக்கும். காந்திஜி வகுத்த பாதையில் நாம் உறுதியுடன் முன்னேறியதால் தான் நாட்டிற்கு சுதந்திரம் வாங்கிக் கொடுக்க முடிந்தது. ஜனநாயக முறைக்கான அடிக்கல் நாட்டினோம். நாட்டை விரைவில் தொழில்மயமாக்கி ஒவ்வொரு விதத்திலும் அதன் வலிமையையும் திறமையையும் கூட்டினோம். நம்மைக் குறைத்துக் கூறி, நம்மீது குற்றங்கள் சுமத்திய போதிலும், உலக நாடு எதுவும் 'இந்தியா வலுக்குன்றிவிட்டது' என்று கூறிவிட முடியாது.

''இந்தியா தற்போதைய அளவுக்கு வலிமை படைத்ததாக எப்போதும் இருந்ததில்லை. தற்போது பெற்ற வலிமை இன்றி இந்தியா முன்னேறி இருக்க முடியும் என்று எவரேனும் கூற இடியுமா? இந்த வலிமை இன்றி, நமது தொழில்துறையை அபிவிருத்தி செய்திருக்க முடியாது, நமது மக்களுக்கு எந்த வசதிகளையும் செய்து கொடுத்திருக்கமுடியாது.

### உலகமே நீ மௌனியாகி விடுவது ஏன்?

''நாம் போராடிப் பெற்ற சுதந்திரம் எப்போதும் நீடிக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். ஆனால் சில சமயங்களில் இராணுவப் போராட்டத்தைச் சமாளித்திருக்கிறோம். பயங்கரமான, கண்ணுக்குப் புலப்படாத, மறைமுகமாக ரகசியத் தாக்குதல்களாலும் நாம் கஷ்டப்பட்டிருக்கிறோம். இந்த உட்பகைமை முன்னதாகவே இருந்தது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் இது வெளிப்படையாகக் கூறப்பட்டது. எந்த விதத் தடைகளும் இல்லாதபோது எவரும் சிறை செய்யப்படவில்லை. எந்தப் பத்திரிகை மீதும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படவில்லை. இந்தியாவைப் பல நாடுகள் அப்போது ஆதரிக்கவில்லை. இராணுவ ஆட்சியின்கீழ் உள்ள நாட்டிற்கோ அல்லது மக்களின் கருத்துக்களை அடக்கி வைத்த அரசுகளுக்கோ தான் வெளிநாடு உதவியது.

''இந்தியாவுக்கு எப்போதுமே உதவாத நாடு தான் அது. ஒருவர் இருவர் மட்டும் அல்லாமல் இலட்சக்கணக்கான மக்கள் படு கொலை செய்யப்பட்டதைக் கண்டு அந்நாட்டு மக்கள் பேசா மடந்தைகளாக இருந்தனர். இத்தகைய மக்கள்தான் தற்போது இந்தியா வின் புகழ் பாடுகின்றனர்.

''இது முதன் முறையாக நடைபெறுவது இல்லை என்பதை நீங்கள் நினைவு கூர வேண் டும். காந்திஜி உயிருடன் இருந்தபோது அவர் மீது என்னென்ன குற்றங்கள் சுமத்தப்பட்டன வோ, அவை ஜவஹர்லால் நேரு மீதும், என் மீதும் சுமத்தப்படுகின்றன. என் மீது குற் றங்கள் சுமத்தப்படும் முன், இந்தியா பற்றிக் குறைத்துக்கூறப்பட்டது. இந்தியா ஏன் அணுப் பரிசோதனை நடத்த வேண்டும்? இந்த 'மாபெரும் அபாயம்' குறித்து உலகமே கவலை கொண்டிருக்கிறது. ஆனால் அணு குண்டுகளைக் குவித்து இதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய் களைச் செலவழித்து வரும் நாடுகள் விஷயத்தில் உலகம் மௌனியாகிவிடும். மாறாக இத் தகைய ஆயுதங்களை விற்க முயற்சிக்கப்படுகின் றன.

''இருந்தாலும் நமது பொருளாதார நிலையை மேம்படுத்த நடவடிக்கையை மேற் கொண்டால் அவை தவறானவை என்று கண்டிக்கப்படுகின்றன. உதாரணமாக, நம் நாட்டில் எஃகுத் தொழிலை ஏற்படுத்தியபோது 'ஏழை நாடான இந்தியாவில் கிராமங்கள் சம் பந்தமான எல்லாப் பிரச்சினைகளும் இருக்கும். அதற்கு இரும்பு அல்லது எஃகு தேவையில்லை' எனக் கூறி விவாதிக்கப்பட்டது. நவீன நாட் டிற்கான அடித்தளமாக எஃகுத்துறை விளங்கு கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். விவ சாயிகள், தொழிற்சாலைகள், சாதாரண மனி தர்கள் ஆகியோரின் தேவைகளை ஆயிரக் கணக்கான வழிகளில் அது சமாளிக்கிறது. ஜவஹர்லால் நேரு மட்டும் இத்தொழிலுக்கு அடிக்கல் நாட்டியிராவிட்டால், நாம் இன்ன மும் பழைய நிலையில் தான் இருந்திருப்போம்.

**நாம் பிச்சை எடுக்க மாட்டோம்!**

''நமக்கு இன்னமும் பல பொருட்கள் தேவைப்படுகின்றன. ஆனால் நாம் பிச்சை எடுக்கமாட்டோம்! சில ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று பலர் கூறுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு 12 கோடி டன் உணவு தானி யங்களை உற்பத்தி செய்திருக்கிறோம். தானிய சேமிப்புதான் தற்போதைய பிரச்சினை!

**எல்லா வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவோம்!**

''பருவமழை கைகொடுத்தது உண்மை தான். ஆனால் அரசு, விவசாயிகளுக்கு உதவா மலிருந்தால், இந்த உதவியை ஏற்றுக்கொண்டு நவீன விவசாய முறைகளை உழவர்கள் கடைப் பிடித்துக் கடுமையாக உழைத்திருக்காவிட் டால், இந்த அளவுக்கு உணவு தானிய உற் பத்தி உயர்ந்திருக்காது. சில பகுதிகளில் பருவ மழை குறைவாகவே பெய்தது. குறிப்பாக தென்னிந்தியாவில், தமிழ்நாட்டில் வறட்சி நிலைமை ஏற்பட்டது. மற்ற பகுதிகளில் அதிக மழை பெய்ததால், நமது விவசாயிகள் கஷ்டப் பட வேண்டியிருந்தது. அவர்களிடம் நான் முற்றிலும் இரக்கம் கொள்கிறேன். ஆனால் அவர்களால் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்பதை நாம் உணர்வோம். இத்தகைய சூழ்நிலையைச் சமாளிக்கும் திறன் விஞ்ஞான, தொழில்நுட்ப உதவியுடன் அதிகரித்துள்ளது என்பதையும் அறிவோம். விஞ்ஞான, தொழில் நுட்பப் பலன்கள் இன்னமும் நாட்டின் எல்லா பாகங்களுக்கும் போய்ச் சேரவில்லை. நாட் டில் மூலைமுடுக்குகளில் எல்லாம் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். மலைப் பிராந் தியங்களின் விசேஷத் தேவைகள், பாலைவனப் பகுதிகள், அதிக மழை மற்றும் வெள்ளம் ஏற்படும் பகுதிகள் ஆகியவற்றின் தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப, குறிப்பிட்ட பகுதி களுக்கான சிறப்புத் திட்டங்களை வகுக்க வேண்டும். நாம் இந்த நோக்கில் திட்டம் தீட்ட வேண்டும். எஃகுத் தொழிற்சாலையோ அல்லது வேறு பெரிய தொழிற்சாலையோ இருந்தால் போதாது. நமக்குக் கிடைக்கும் எல்லா வளங்களையும் நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதிலேயே கவனம்


அடுத்த இதழ்!

# பாரதியார் சிறப்பிதழ்!

இந்திய விடுதலைக்குத் தமது எழுச்சிமிகு கவிதை யால் உணர்ச்சியூட்டிய மகாகவி பாரதியார் அவர்களின் நினைவுநாளை யொட்டி, 16-9-1976 தேதிய ''தமிழரசு'' இதழ், 11-9-1976 அன்றே வெளி வரவிருக்கின்றது. அவ் விதழில் அமரகவி பாரதி யார் அவர்கள் தம்மைப் பட எழுதிய உணர்ச்சி மிகுகவிதைகளின் புகைப் படங்களும், நீங்கள் இது வரை அவரைப்பற்றி கேள்விப்பட்டிராத அரிய நிகழ்ச்சிகளும், புகழ் பெற்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோர் பாரதியாரைப் பற்றி எழுதியுள்ள கட்டுரை களும், கவிதைகளும் இடம் பெறும்! எனவே, அடுத்துவரும் ''தமிழரசு'' இதழ் வாங்கத் தவறா தீர்கள் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.

செலுத்த வேண்டும். நம்மிடையே இந்த உணர்வு ஏற்பட்டால் நமது நாடும் மக்களும் விரைவில் முன்னேற்றம் அடைய முடியும்.

### தொழிலாளர்களுக்கு வாழ்த்து!

''அரசுத்துறையின் கீழ் உள்ள நிறுவனங்கள் பற்றி விமர்சிப்பதைப் பத்திரிகைகள் வழக்கமாகக் கொண்டிருந்தன. அரசுத்துறை நிறுவனங்களை நடத்த முடியாது என்றும், அவற்றிற்கு இழப்பு நேரிடும் என்றும் பெரிய தொழில் அதிபர்கள் ஆருடம் கூறியது உண்டு. இருந்தாலும் அந்நிறுவனங்களில் பல, தற்போது இலாபம் சம்பாதித்து வருகின்றன. அவற்றின் உற்பத்தியும் அதிகரித்துள்ளன. நமது மொத்த உற்பத்தி அதிகரிப்புக்கு அரசுத்துறை நிறுவனங்கள் தான் பெரும்பாலும் காரணம் ஆகும். தற்போது திருப்திகரமாகச் செயல்பட்டு வரும் சில அரசுத்துறை நிறுவனங்கள், தங்கள் உற்பத்தித் திறனை விரைவில் மேம்படுத்திக் கொள்ளும் என நாங்கள் நம்புகிறோம். இந்த விஷயத்தில் நாங்கள் முயற்சி மேற்கொண்டு வருகிறோம். எல்லா விஷயங்கள் குறித்தும் எப்போதும் நாம் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு குடிமகனும் தமது கடமைகளை உணர்ந்தால்தான் இது சாத்தியமாகும். நமது தொழிலாளர்களுக்கு வாழ்த்துக் கூற விரும்புகிறேன். உற்பத்தி மேம்பாட்டுக்கு அவர்களுடைய கடின உழைப்புதான் காரணம்.

## கல்வி காட்ட வேண்டிய வழி

நமது புலன்களின் திறனைக் கண்டுபிடித்து ஏற்று, ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுவதற்கான ஒரு பயிற்சியை அளிக்கிறது கல்வி. ஒருவர் சுயமாக முன்வந்து பொறுப்பை ஏற்றுக் கொள்ள விருப்பம் தெரிவிப்பதைக் குறிக்கும் விதத்தில் மனமுதிர்ச்சி அடைய, கல்வி, வழி காட்ட வேண்டும். ஒத்துழைப்பு உணர்வு, மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற தன்மை, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களில் ஈடுபட வேண்டும் என்ற ஓர் உணர்வு ஆகியவை கல்வி கற்பதன் மூலம் மனத்தில் ஏற்பட வேண்டும்.

—இந்திரா காந்தி.

### ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வோம்!

''இன்னும் சில மணி நேரங்களில் அதாவது இன்று மாலை ஸ்ரீலங்காவுக்கு நான் புறப்பட்டுச் செல்கிறேன். கூட்டுச்சேரா நாடுகளின் உயர் மட்ட மாநாடு அங்கு நடைபெறுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். தங்கள் சுதந்திரத்தை எப்படிப் பாதுகாப்பது என்பது பற்றி அந்த உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொள்ளும் நாடுகள் விவாதிக்கும். ஒரு நாட்டின் எல்லைப் பகுதிகளைப் பாதுகாப்பது மட்டுமே பெரிய விஷயமாகிவிடாது. நாடு வலுப்பெற்று சுபிட்சம், அபிவிருத்திப் பாதையில் முன்னேற தனக்கென இலட்சியங்களை வகுத்துக் கொண்டு அவற்றை அடையப் படுபடுவதற்கான சுதந்திரம் பற்றிதான் தற்போது முக்கியமாக விவாதிக்கப்படவிருக்கிறது.

''நம் யாவருக்கும் ஒரே விதமான பிரச்சினைகள் தான் உள்ளன. ஆகையால் நாம் ஒத்துழைத்து பரஸ்பரம் உதவி புரிந்து கொண்டால், நாம் வல்லரசுகளாக வளர்ந்து விட முடியும். 'நலிவுற்ற சக்திகளின் வலிமை' என்பதை விளக்கிய குருதேவர் தாகூர், நலிவுற்ற சக்திகள் கூட உறுதியாகச் செயல்பட்டால் மாபெரும் சக்தியாக மாறிவிட முடியும் என்று கூறியுள்ளார். இது தான் நமது அனுபவமும் கூட. சுதந்திரப் போராட்டத்தின் போது இந்திய மக்களின் வலு என்ன? அவர்கள் வறுமையாலும், பீதியாலும் கீழ்ப்படியும் உணர்வினாலும் கஷ்டப்பட்டனர். ஆனால் விமர்சனங்கள், தாக்குதல்கள் இருந்த போதிலும் நாம் ஒட்டுமொத்தமாக எழுச்சி பெற்றதால் தான் நமது இலட்சியத்தை அடைய முடிந்தது. நம் நாட்டு ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் பலம் அப்போதைய வல்லரசுகளின் வலுவைவிட அதிகமாக அதிகரித்தது. உலகிலுள்ள ஏழை நாடுகளுக்கு இதே வலுவை நாம் ஊட்ட வேண்டும்.

### உள்நோக்கத்துடன் கொடுக்கும் உதவியை ஏற்க மாட்டோம்!

''சில நாடுகள், மற்ற நாடுகளால் ஏமாற்றப்பட அனுமதிப்பதுதான் பிரச்சினையாக உள்ளது. சில உதவிகள் கிடைத்தால் அவற்றை ஏற்றுக் கொண்டு விடலாம் என அவை நினைக்கின்றன. தங்கள் சுதந்திரத்திற்கு இணையாக அந்த உதவிகள் இருப்பதை அவை கவனிப்பதில்லை. ஆகையால் அவை எப்போதும் வலுப்பெற முடியாது. இனி அவை, இத்தகைய உதவிகளுக்காக மற்ற நாடுகளை நம்பியிருக்க வேண்டும்.

''பல்வேறு குறிக்கோள்களைக் கொண்ட எல்லா அரசுகளிடமிருந்தும் நாமும் உதவி பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் விரும்பும் வகையில் அமைந்த, நமது முன்னேற்றத்திற்கு இடையூறு விளைவிக்கக் கூடிய விதத்தில் இருக்கக் கூடிய உதவிகளை நாம் ஏற்றுக் கொள்வதில்லை என்ற கொள்கைப் பிடிப்புக் கொண்டிருக்கிறோம். உள்நோக்கத்துடன் கொடுக்கப்படும் உதவியை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதை நாம் எப்போதும் கூறி வருகிறோம். இக்கொள்கையை நாம் தீர்மானமாகக் கடைப் பிடித்து வருகிறோம். இனியும் தொடர்ந்து நாம் இதைக் கடைப்பிடிப்போம்.

**மாற்றாரின் விமரிசனம் நமக்கு வலிவூட்டும்!**

''ஒரு சில நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாகவோ அல்லது ஒரு சிலர் சிறையில் இருப்பதனாலோ அல்லது பத்திரிகைகள் மீது சில கட்டுப்பாடுகள் இருப்பதனாலோ நாம் இன்னமும் பின்னோக்கிச் செல்லவில்லை. மற்றவர்களின் விமர்சனத்தை மதிக்காமல், ஏழை நாடு ஒன்று எப்படி உறுதியாக முன்னேற்றம் கண்டு வருகிறது என்று பல நாடுகள் நினைப்பதுதான் இதற்கு முக்கிய காரணம். நாம் முன்னேறி வர வேண்டும். நம்மைப் பழித்துக் கூறி, நலிவடையச் செய்ய, அதிக முயற்சி மேற்கொள்ளும்போது, நாம் மேலும் வலுவு பெறுவோம் என்பதை, நம்மை விமர்சிப்போருக்கு நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களின் விமர்சனம் நமக்கு மேலும் வலுவூட்டும். நமது முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வோம்.

## நாம் பெற்ற சுதந்திரத்தின் பொருள்!

இந்தியா தனக்கென முன்னேற்றப் பாதை ஒன்றை வகுத்துக் கொண்டு அறிவுத் திறன், பொறுப்புணர்ச்சி, கூர்ந்த மதி ஆகியவை கொண்ட அறிவாளிகளை உருவாக்க வேண்டும். சமுதாயத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கி, ஆக்கப் பூர்வமான அலுவலில் காணப்படும் திறமையைக் கண்டு இந்திய மக்கள் பெருமிதம் கொள்ள வேண்டும். பரந்த உலகத்தோடு இந்தியாவை ஒப்பிட்டு மிகவும் தன்னடக்கத்துடன் இருக்க வேண்டும். மேலும் இந்த உலகில் சமச் சீரான சூழ்நிலை எப்போதும் இருந்து வருவதைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டும். இத்தகைய இந்தியாவை நாம் உருவாக்காவிட்டால் நாம் அடைந்த சுதந்திரத்திற்குப் பொருளே இருக்காது.

—இந்திரா காந்தி.

''எந்த விதப் போராட்டத்திற்கும் அடி பணியமாட்டோம் என்பதைக் கடந்த சில ஆண்டுகளில் நீங்கள் நேரில் கண்டீர்கள். பனிப் புயல்கள் போன்று சிலர் நம்மை எதிர்த்த போதிலும் நாம் அதனால் பாதிக்கப் படவில்லை. நாம் தொடர்ந்து முன்னேறி வந்தோம். போராட்டமும் துன்பமும் கொண்ட சரித்திர வாழ்க்கையைக் கொண்டது இந்திய சரித்திரம்.

**இளைய தலைமுறையே எண்ணிப்பார்!**

''சகிப்புத் தன்மை, அமைதி ஆகியவற்றிற்குப் பெயர் போனது நம் நாடு. அதே சமயத்தில் அஞ்சா நெஞ்சம், உறுதித் தன்மை, உயர் இலட்சியங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியது இந்தியா என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இன்று ஒவ்வொரு குடிமகனும் நாட்டு வரலாற்றை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். புதிய இந்தியாவின் பிரதிநிதிகளாகவும், சான்றுகளாகவும் தங்களைக் கருதிக் கொள்ள வேண்டும். குழந்தையாக இருந்தாலும் சரி, வயோதிகராக இருந்தாலும் சரி அவர்கள் யாவரும் இதைப்புரிந்து கொள்ள வேண்டிய பொறுப்பில் உள்ளனர். யார் நம்மைப் போற்றுகிறார்கள், யார் நம்மைத் தூற்றுகிறார்கள் என்பது பற்றிக் கவலை இல்லை. வாழ்க்கையில் இவை சர்வ சாதாரண விஷயங்கள். நாட்டை முன்னேறச் செய்வது எப்படி என்பது தான் முக்கியம். ஒரு சிலர் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, நாம் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். புத்திக் கூர்மை மிக்க குழந்தைகள் சரிவரப் பாடம் படிக்காவிட்டாலோ அல்லது விளையாட்டில் அக்கறை காட்டாவிட்டாலோ அவர்களுக்கு உடல் வலிமையோ மனவலிமையோ இருக்காது. இளைய தலைமுறை வலுவாகவோ ஆக்கப் பூர்வமான முறையில் ஈடுபடாமலோ அல்லது நாட்டுப்பற்று உணவு இன்றியோ அல்லது நாட்டிடம் அன்பு கொள்ளாமல் இருந்தாலோ அது நமது மாபெரும் நலிவாக அமையும். நாட்டுக்கு அதிகபட்சக் கேடு விளைவிக்கும்!

**நமது வலிமைக்கு ஊட்டம் தருவது கட்டுப்பாடே!**

''ஒரு நாட்டின் எல்லைப்புறங்களை முப்படைகள் பாதுகாக்கின்றன. அப்படைகள் குறித்து நாம் பெருமிதம் கொள்வதில் நியாயம் உள்ளது. அஞ்சா நெஞ்சம் மிக்க வலுவான நாடு அவர்களுக்குத் துணை நின்றால் அவர்களால் தீரத்துடன் போராட முடியும். நமது சரித்திரம் குறித்தும், வருங்காலம் குறித்தும் நாம் இன்றைய தினத்தில் நினைத்துப் பார்க்க வேண்டும். நாடு எந்த அளவுக்கு வலுப்பெறும் என்பதையும் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடையும் என்பதையும் நாம் தீர்மானிக்க வேண்டும். இதற்கு வேறு ஒருவரின் உதவி தேவை இல்லை. நமது வலிமை, திடசிந்தனை, நுண்ணறிவு போன்றவற்றின் மூலம் நாம் ஒருங்கிணைந்து செயல்பட்டுத் தீர்மானிக்க முடியும். தற்போது உருவாகி உள்ள கட்டுப்பாடு உணர்வு நமது வலிமைக்கு ஊட்டம் கொடுக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

**நெருக்கடி நிலை தளர்த்தப்பட்டுள்ளது!**

''நாட்டில் சிலர் நெருக்கடிநிலை ரத்து செய்வது பற்றி விவாதித்து வருகிறார்கள்.

கடந்த பல மாதங்களாக நெருக்கடிநிலை தளர்த்தப்பட்டுள்ளதையும் இதனால் ஏற்பட்ட விளைவுகளையும் எவரும் கவனிப்பதில்லை. சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் அராஜகம், போராட்டங்கள், வேலைநிறுத்தம் போன்ற நாட்டுக்குத் தீங்கிழைக்கும் செயல்களை விட்டொழிக்க ஒப்புக்கொள்கிறார்களா அல்லது இன்னமும் பழைய பாதையிலேயே தொடர்ந்து செல்லத் தீர்மானித்துள்ளார்களா? இக் கேள்வியை நாம் இன்று கேட்க வேண்டும். தீர்மானிக்க வேண்டியது நமது கைகளில் இல்லை. நாட்டைச் சின்னாபின்னமாக்கி, கட்டுப்பாட்டு உணர்வைக் குலைத்து, ஜனநாயகத்திலும், நாம் புரிந்து கொண்ட சுதந்திரத்திலும் நம்பிக்கையில்லாதவர்களையும், கூட்டுச் சேராமல் இருப்பவர்களையும் சமூக வேறுபாடுகளை ஒழிப்பதில் அரசுக்கு உதவாதவர்களையும் ஊக்குவிக்கும் ஒருசிலர் கைகளில் தான் உள்ளது. இவர்கள் இந்த இலட்சியங்களை அடைய ஒருபோதும் துணை போகவில்லை. இந்த இலட்சியங்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தத் தூண்டிவிட்டனர்.

**ஏழைகளுக்கு உதவும் திட்டங்கள் !**

''பல ஆண்டுகளுக்குப் பிறகு நாம் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். முதன் முறையாக ஏழைகளுக்கு உதவும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்கின்றன. நாம் எதிர்பார்த்த வேகத்தில் அவை செயல்படாவிட்டாலும் நல்ல முறையில் செயல்படுத்தப்படுகின்றன. 70 இலட்சம் மக்களுக்கு வீடுகள் அளிக்கப்பட்டுள்ளன. என்பது, பல கோடி மக்கள் வாழும் மாபெரும் நாட்டில் சிறிய விஷயம் தான். ஆனால் முந்தைய நிலையோடு ஒப்பிடுகையில் 70 இலட்சம் என்பது பெரிய சாதனைதான்! 70 இலட்சம் பேருக்குக் கூட வீடுகள் கொடுக்க வேண்டாம் என நாம் நினைத்தால் நாம் எப்படி மேலும் பலருக்கு வீடுகள் கொடுக்க முடியும்?

**கடமை இன்றி உரிமையைக் கொண்டாட முடியாது !**

''இத்தகைய விஷயங்கள் குறித்து தற்போதுதான் நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அரசோ அல்லது எந்த நிறுவனமோ மக்களை அச்சுறுத்துவதை நாம் விரும்பவில்லை. அதை நாம் தவிர்க்க முயற்சிக்க வேண்டும். யாவரும் கட்டுப்பாட்டு உணர்வுடனும், நாட்டுப் பற்று மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். கடமை இன்றி உரிமையைக் கொண்டாட முடியாது என்று காந்திஜி கூறியதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். கடமைகளின் மூலம் உரிமைகள் கிடைக்கும்போது தான் உண்மையான ஜனநாயக முறை ஏற்படும். இத்தகைய ஜனநாயக முறையில்தான் ஏழைகளின் குரல் கேட்கும்; நீதி அல்லது சமூக அந்தஸ்து போன்றவை காரணமாக எவரும் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது; இத்தகைய ஜனநாயக முறை கொண்ட நாட்டில்தான் ஏழைகளுக்கும், பின்தங்கியவர்களுக்கும் உரிமைகள் உண்டு என்பதை மற்றவர்கள் நினைப்பார்கள். நமது உரிமைகளுக்காகப் பாடுபடுவதைப் போன்று மற்றவர்களின் உரிமைகளுக்காகவும் நாம் போராட வேண்டும். இந்த உணர்வு யாவரிடமும் தோன்றும்போது எல்லோருக்கும் உரிமைகள் கிடைக்கும். ஆனால் ஒரு சிலருக்கு மட்டும் உரிமைகள் இருக்க வேண்டும் என்றும் மற்றவர்களுக்கு என்ன நேர்ந்தாலும் அதைப் பற்றிக்கவனிக்காமல் இத்தகையோரின் வார்த்தைகளுக்கே செவிமடுக்க வேண்டும் என்றும் நாம் நினைத்ததால் தான், நமது சுதந்திரத்தை இழந்தோம். ஆகையால் இதே தவறை மீண்டும் நாம் செய்யக்கூடாது.

**அட்டைப்பட விளக்கம்**

இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் என்னும் ஒளி விளக்கின் மூலம் அறியாமை இருள் அகல்வதால், ஆண்டாண்டுக் காலமாய் அடிமையாய் உழன்ற கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்கள் முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுகின்றனர்!

**என்னோடு தோளோடு தோள் சேர்ந்து நடந்து வாரீர் !**

''இந்தியா ஒரு தியாக பூமியாக விளங்குகிறது. ஆனால் தற்போது பெரிய தியாகங்கள் எதையும் செய்ய வேண்டியதில்லை. நமது மக்களுக்கும், நாட்டுக்கும் புத்துயிர் அளிப்பதற்கு மனவலிமையும் உறுதியும் தேவைப்படுகின்றன. மரங்கள் நிறைந்த பகுதி அல்லது மலைகளை நாம் விரும்பி அபிவிருத்தி செய்யலாம். ஆனால் நாடு என்றால் மரங்கள் நிறைந்த பகுதி அல்லது மலைகள் என்பது அர்த்தம் அல்ல. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டிய கோடிக்கணக்கான மக்களை, நாடு குறிக்கிறது. அவர்களுக்கு மேலும் அதிக வசதிகளைச் செய்து கொடுத்து, அவர்களுடைய குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தைச் சிறக்கச் செய்ய வேண்டும். எனது மாபெரும் பயணத்தில் என்னோடு தோளோடு தோள் சேர்ந்து நீங்கள் யாவரும் நடந்து வாருங்கள்.

''இன்று உங்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கிறேன். வருங்காலத்திற்கு நல்லாசிகள். இளைஞர்களும் முதியவர்களுமாகிய நீங்கள் யாவரும் என்னுடன் சேர்ந்து 'ஜெய் ஹிந்த்' எனக் கூறுங்கள்.

''ஜெய் ஹிந்த், ஜெய் ஹிந்த், ஜெய் ஹிந்த்.''

**(நன்றி : பத்திரிகைத் தகவல் அலுவலகம், சென்னை.)**

# சமூக நலத் திட்டங்கள் வெற்றி பெற.....



**திருமதி தாரா செரியன்**
**தலைவர்,**
**மாநில சமூக நல வாரியம்,**
**தமிழ்நாடு.**

சமூக நலம் என்பது பெண்களின் சுதந்திரத்தைப் பற்றியதல்ல; பெண்களுக்கு மேலும் மேலும் உரிமைகளைக் கேட்கும் பணியுமல்ல. சமமான கல்வியும் இணையான தகுதியும் படைத்த பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் அலுவல்களைத் தரவேண்டும் என்று மாநில அரசுகளையும் மத்திய அரசையும் கேட்பதே சமூகநலம் ஆகும்.

எல்லாத் துறைகளிலும் ஆண்களும் பெண்களும் இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது. ஆணுக்குப் பெண் எதிரி என்ற எண்ணமோ, தாழ்வு என்ற மனப்பான்மையோ ஏற்படக் கூடாது. இருவரும் சேர்ந்து பணியாற்ற வேண்டும். சான்றாக, குடும்ப நலத்தை எடுத்துக் கொள்வோம். கணவன், மனைவி இருவரும் ஒரு முகப்பட்ட அபிப்பிராயம் கொண்டுதான் அதனை நிறைவேற்ற முடியும். ஆணினால் மட்டுமோ, பெண்ணினால் மட்டுமோ நிறைவேறக்கூடிய பணி அல்ல இது! இருவரும் ஒரே எண்ணத்துடன் அமர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டிய சூளுரை ஆகும். ஒருவர்க்கொருவர் ஒத்துப் போவதனால் மட்டுமே நிறைவேறக் கூடிய பணி இது!

இதுபோலவே சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒருமைப்பாடு இருக்க வேண்டும். அப்போதுதான் சமூகம் உண்மையாகவே நலம் பெற்றுத் திகழ முடியும்.

பெண்களுக்கெனத் தனி வேலை வாய்ப்பு நிறுவனம் தேவை என்று சிலர் கருதுகிறார்கள். இது தேவையில்லை! ஆணும் பெண்ணும் சமம் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் நமது சமுதாயம் பிரிவுபடுவதற்குத்தான் இது வழி வகுக்கும். மேலும் பெண்களுக்கென ஒரு தனி வேலைவாய்ப்பு நிறுவனத்தை உருவாக்கினால், அதற்கென ஊழியர்கள், அலுவலகம், நிர்வாகம் எனப் பல்வேறு நிலைகள் தேவைப்படுவதுடன், அரசுக்கும் அதிகச் செலவு ஏற்படும். எனவே இது தேவையில்லாதது; ஒற்றுமை உணர்ச்சிக்கு ஊறு செய்வது.

சமூக நலத்துறையைச் சார்ந்த மகளிர் நிறுவனங்களில் பாய் பின்னுதல், கூடை முடைதல் போன்ற பணியிலேயே நாம் இருக்கிறோம். திரும்பத் திரும்ப இதையே செய்து வருகிறோம். நாம் அவற்றை மாற்ற வேண்டும்.

அரசாங்கமும் வர்த்தக சபையும் இது விஷயத்தில் கலந்து, நல்ல, மாற்றங்களைச் செய்ய வேண்டும். மகாராஷ்டிராவில் சில நிறுவனங்களின் தயாரிப்புகள் மகளிர் மன்றங்களுக்கு அனுப்பப்படுகின்றன. பெரிய கூடத்தில் 20 அல்லது 30 பெண்கள் அமர்ந்து அந்த வணிகப் பொருள்களை கட்டுகளாகக் கட்டி அனுப்புகின்றனர். சாக்லெட்டுகள், சோப்புகள் ஆகியவை இவர்களால் கட்டுகளாக்கப்பட்டு விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த முறையை நமது தமிழகத்திலும் அறிமுகப்படுத்தலாம். இந்தப் பணியைச் செய்வதற்கு உடல் ஊனமுற்றவர்கள் எளிதில் பயன்படுத்தப்படலாம். இதனைச் செய்யும் பெண்களுக்கு கை வேலை (Craft Work) தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆர்வமும் அக்கறையும் இருந்தாலே போதும்.

நமது மாநிலத்தில், பெண்களுக்கு, 'பகுதி நேர அலுவல்' (Part Time Work) தரப்படுதல் மிக அவசியம். அவர்கள் தங்கள் வீட்டு வேலைகளையும் செய்துகொண்டு, இந்தப் பகுதி நேர அலுவலையும் செய்ய முடியும்; பகுதி நேர அலுவலினால் அவர்கள் பெறுகின்ற ஊதியம், அவர்களது குடும்பச் செலவுக்குப்



பயன்படுவது உறுதி. அரசு பல துறைகளில் இலட்சக்கணக்கில் பணத்தைச் செலவிடுகிறது. அவற்றில் மிகக் குறைவான பணத்தை, 'மகளிர் பகுதி நேர வேலைக்குச்' செலவிட்டால் மிகவும் நல்லது.

அரசு எவ்வளவோ பணம் செலவு செய்து பெண் டாக்டர்களையும், பெண் நர்சுகளையும் ஆசிரியைகளையும் உருவாக்குகிறது. திருமணம் செய்தவுடன் சில பெண்கள் தங்களின் பணியைத் தொடர முடியாது போய் விடுகிறது. அத்தகையவர்களின் திறமை-படிப்பு ஆகியவற்றை அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்: எனவே அவர்களுக்கு, பகுதி நேர அலுவலை அரசு அளிக்க வேண்டும்.

நமது சமூகத்தில் எதற்கும் அரசையே எதிர்பார்ப்பது என்ற எண்ணமே பொதுமக்களிடம் நிறைந்துள்ளது. ஜனநாயக முறையில் அரசு மட்டும்தான் மக்களுக்குப் பணி ஆற்றவேண்டும் என்பதில்லை; பொதுமக்களும் பணி ஆற்ற வேண்டும்; அப்போது தான் சமூகமும், நாடும் முன்னேற்றப் பாதையில் பீடுநடை போடமுடியும். இதயம் நிறைந்த இந்தக் கூட்டுறவு உணர்வுதான் வெற்றி என்னும் கதிர்மணியை எதிர்காலத்தில் நமக்கு விளைவித்துத் தர முடியும்.

சமூகநலப்பணி என்பது பருவகாலப் (Seasonal Job) பணி அல்ல; இது தொடர்ந்து நடைபெறும் தூய பணி. எனவேதான் அரசுடன் பொது மக்களும் சேர்ந்து பணி புரிய வேண்டியுள்ளது. இரு கரம் தட்டினால்தான் ஒலி எழும்; அது போல அரசு, பொதுமக்கள் என இரு பிரிவினரும் சேர்ந்து பணிபுரிந்தால்தான் வெற்றி என்னும் இனிய நாதத்தைக் கேட்க முடியும்! ஆகவே, பொதுமக்கள் உள்ளன்புடன், இதய உணர்வுடன் பணி ஆற்ற வேண்டும்!

நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அறிவித்துள்ள 20 அம்சத் திட்டம் வெற்றி பெறுவதற்கும் பொது மக்கள் மிகுந்த ஒத்துழைப்புத் தர வேண்டும். அனைவரின் கூட்டுறவில்தான் அரசின் திட்டங்கள் வெற்றி பெற முடியும்! எனவே சமூகநலத்துறையின் திட்டங்கள் வெற்றி பெற்றிட—சாதனைகள் பெருகிட சகல மக்களும் மனப் பூர்வமாக ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## செங்கற்பட்டு மாவட்டத்தில் பாசன வசதிகள்...

செங்கற்பட்டு மாவட்டத்தில் தற்போதுள்ள பாசன வசதிகளை நிலைப்படுத்தவும், கூடுதலாக 7263 டன் உணவுத் தானியம் விளைவிக்கவும் ரூ. 2 கோடியே 16 இலட்சம் செலவு பிடிக்கும் 3 பாசனத் திட்டங்கள் அமல் படுத்தப்படும்.

இம்மாவட்டதில் மிகப் பெரியதான செம்பரம்பாக்கம் ஏரியை ரூ. 16 இலட்சம செலவில் அபிவிருத்தி செய்வது, அதற்கு அடுத்த பெரிய ஏரியான மதுராந்தகம் ஏரியை ரூ. 80 இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்வது, ரூ. 70 இலட்சம் செலவில் ஆரணி யாற்றின் மீது அணை கட்டுவது ஆகியவை இத் திட்டங்களாகும்.

மேலும் அதிக விளைபரப்பில் உயர்விளைச்சல் நெல் ரகங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வந்ததன் மூலம் இம்மாவட்டம் உணவுத் துறையில் ஏற்கெனவே தன்னிறைவு பெற்றுள்ளது. கடந்த நவரைப் பருவத்தில் 2.13 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் இது 1.12 இலட்சம் ஏக்கராக இருந்தது. உயர் விளைச்சல் ரகங்களின் சாகுபடி நிலப் பரப்பை 'காரிப்' (ஐப்பசி—கார்த்திகை அறுவடை) பருவத்தில் 2.9 இலட்சம் ஏக்கராகவும் "ராபி" (சித்திரை—வைகாசி அறுவடை.) பருவத்தில் 4 லட்சம் ஏக்கராகவும் உயர்த்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

## மாம்பழ ஏற்றுமதி அதிகரிப்பு

1975-76-இல் இந்திய மாம்பழ ஏற்றுமதி வெகுவாக அதிகரித்தது. அந்த ஆண்டில் 1 கோடியே 61 லட்சதது 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 3906 டன் மாம்பழ வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதற்கு முந்தய ஆண்டில் 68 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 1619 டன் மாம்பழ வகைகள் தான் ஏற்றுமதியாயின. ஆல்ஃபோன்ஸா ரக மாம்பழம் தான் அதிக அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியாவிலேயே பல்வேறு ரக மாம்பழங்களை உற்பத்தி செய்யும் மாநிலம் உத்தரப் பிரதேஷம் தான். தஸ்ஸேரி, லங்கரா, சௌன்ஸா போன்ற மாம்பழரகங்களை வெளிநாட்டவர்கள் விரும்பி விலைக்கு வாங்குகின்றனர்.

1975—76-ஆம் ஆண்டில் முதல் 9 மாதக் காலத்தில் துபாய், குவைத், பாஹ்ரைன் தீவுகள், பிரிட்டன் ஆகிய நாடுகள் மாம்பழங்களை மிக அதிக அளவுக்கு இந்தியரவிடமிருந்து விலைக்கு வாங்கின. சோவியத்யூனியன், சவூதி அரேபியா, எத்தியோபியா ஆகிய நாடுகள் மாம்பழச்சாறு அடங்கிய புட்டிகளை அதிகமாக விலைக்கு வாங்கிக் கொண்டன.



# மலிவான செலவில் வலிவு அளிக்கும் சிற்றுண்டிகள்!

**மகளிர் அரங்கம்**

கிராமங்களில் அரிசியினால் மட்டுமல்ல கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய தானியங்களைக் கொண்டும் புட்டு தயாரிக்கிறார்கள். நகர நாகரிகம் இவற்றை எல்லாம் மறப்பதற்கு வழி செய்ததோடு, அரிசிப் பொருள்களையே உண்ணவைத்து, அளவுக்கு மீறிய மாவுச்சத்தை (Starch) உடலுக்கு ஊட்டி, பலவித நோய்களுக்கு ஆளாக்குகிறது. எனவே, எப்போதும் எதற்கும் அரிசியையே பயன்படுத்தும் வழக்கம் மாறவேண்டும். அவ்வப்போது கோதுமையைப் பயன்படுத்தி வரவேண்டும்.

கோதுமை என்றால் நம்மில் பலருக்குக் கசப்பாக இருக்கிறது. கோதுமைப் பண்டங்களை உண்பதென்றால் சிலர் மிகுந்த சிரமப்படுகிறார்கள். கோதுமையில் சுவையான பண்டங்கள், உணவு வகைகள் யாவும் தயாரிக்க முடியும் என்பதை முந்திய இதழ்களில் 'மகளிர் அரங்கம்' பகுதியில் வெளிவந்துள்ள கட்டுரைகள் தெரிவித்துள்ளன. இந்த இதழிலும் கோதுமைத் தயாரிப்புகள் இரண்டைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

### கோதுமைப் புட்டு

தேவையான பொருள்:

கோதுமை ரவை – 85 கிராம்
உப்பு—சுவைக்கேற்ப

செய்முறை:

உப்புக் கலந்த நீரை ரவையில் தெளிக்க வேண்டும். பின்னர் ரவையை ஆவியில் வேக வைக்க வேண்டும். ரவை வேகும்போது அதைக் கிளறிவிட வேண்டும். (ரவை வேகும்போது தீ அதிகம் எரியவிடாது, குறைக்க வேண்டும்) தேவையென்றால் வெல்லம் கலந்து கொள்ளலாம். சுவையாக இருக்கும்.

300 கலோரிகள் சத்தும், 10 கிராம் புரதச் சத்தும் கொண்ட கோதுமைப் புட்டு, 8 காசு மதிப்பில் கிடைத்துவிடுகிறது.

### கோதுமை லட்டு

தேவையான பொருள்கள்:

கோதுமை மாவு—30 கிராம்
பச்சைப் பயறு—20 கிராம்
வேர்க்கடலை—8 கிராம்
பழுப்புச் சர்க்கரை—20 கிராம்

செய்முறை:

பச்சைப் பயற்றையும் வேர்க்கடலைப் பருப்பையும் வறுத்துப் பொடி செய்துகொள்ள வேண்டும். பின்னர், கோதுமையை வறுத்துக் கொள்ள வேண்டும். வறுத்த கோதுமையுடன் பச்சைப் பயறு, வேர்க்கடலைப் பருப்பு ஆகியவற்றின் பொடியைக் கலக்க வேண்டும். பழுப்புச் சர்க்கரையையும் இவற்றுடன் கலக்க வேண்டும். கலவையை உருண்டைகளாகச் செய்ய வேண்டும். இதுதான் கோதுமை லட்டு, சுவையாக இருக்கும்; குழந்தைகளுக்கு இடைவேளைச் சிற்றுண்டியாகக் கொடுக்கலாம்.

300 கலோரிச் சத்தும், 10 கிராம் புரதச் சத்தும் கொண்ட கோதுமை லட்டு, 10 காசு மதிப்பில் கிடைத்துவிடுகிறது.

### பருப்புக் கூட்டு

சிற்றுண்டி என்ற பெயரால் எத்தனையோ உணவுப்பொருள்கள் உள்ளன. அவை எல்லாம் உடலுக்கு ஊட்டச்சத்தைத் தருகின்றன என்று சொல்லிவிட முடியாது.

பருப்புக்கூட்டு என்னும் உணவுப் பொருள் ஊட்டச்சத்து மிகுந்ததாகவும் சுவையானதாகவும், விளங்குகிறது. அதன் தயாரிப்பைப் பார்ப்போம்.

தேவையான பொருள்கள்:

பச்சைப் பயறு அல்லது கடலைப் பருப்பு—50 கிராம்
எலுமிச்சை அல்லது மாங்காய்-1
தேங்காய்த் துருவல்—2 கரண்டி
பச்சை மிளகாய்—4
எண்ணெய்—7 கிராம்
கடுகு—சிறிதளவு
உப்பு—தேவைக்கு ஏற்ப.

செய்முறை:

பருப்பைச் சுத்தம் செய்து சுமார் 2 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும்.

பின்னர், கழுவி, நீரை வடித்து விட்டு, மாங்காய்த் துண்டுகளையும் தேங்காய்த் துருவலையும் கலக்க வேண்டும். பின்னர் சுவைக்கேற்ப உப்புச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பச்சை மிளகாயை அரிந்து, கடுகையும் சேர்த்து, எண்ணெய்யில் இட்டுத் தாளிக்க வேண்டும்; அதனைப் பருப்புக் கலவையில் சேர்க்க வேண்டும். 240 கலோரிகள் சத்தும், 12 கிராம் புரதச் சத்தும் கொண்ட சுவையான பருப்புக் கூட்டு 15 காசுகள் விலையில் தயாராகிவிடுகிறது. (மாங்காய்க்குப் பதில் எலுமிச்சைச் சாற்றைச் சேர்க்கலாம்.)

குறிப்பு: ஒருவருக்குத் தயாரிக்கும் அளவுதான் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆட்களைப் பொறுத்து, அளவை, நேர்விகிதத்தில் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

—எஸ். எஸ்.

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

**ஆண்டுக்கு இருமுறை**

**குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்**

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.



# 'கை' கொடுக்கும் மருத்துவம்!

**கை**யை நம்பியே நம் வாழ்க்கையும் அமைகிறது.!

சின்னஞ்சிறிய கைகளே இந்தப் பெரிய உலகத்தை உருவாக்குகின்றன. காட்டைத் திருத்திக் கழனியாக்குவதும், ஆயுதம் செய்வதும் நல்ல காகிதம் செய்வதும், அற்புதமான படைப்புகள் அனைத்தும் படைத்து வழங்குவதும் இந்தக் கைகளே அன்றோ?

மனித உடலின் மிக இன்றியமையாத உறுப்பான இந்தக் கைகளுக்கு ஏதேனும் ஊனம் ஏற்பட்டுவிட்டால், வாழ்க்கையே அல்லவா ஊனமாகிவிடும்? இத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையின் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறை ( Plastic Surgery Department ) பேருதவி செய்து வருகிறது.

அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையின் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைப் பிரிவு ஆற்றிவரும் பணியைக் குறிப்பாக தொழிலாளர்களுக்குத் ''தமிழரசு'' இதழ் மூலம் தெரிவிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், பேட்டி காண்பதற்காக ஸ்டான்லி மருத்துவ மனையின் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறைக்குச் சென்றோம். அத்துறையின் பேராசிரியர் டாக்டர் ஆர். வெங்கடசாமி அவர்கள் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை பற்றி விளக்கியதுடன் அவர் தமது அறைக்குள் ஒரு சிறிய திரையில் வண்ண 'ஸ்லேடு' களைப் போட்டுக் காண்பித்தார்.

எத்தனை எத்தனைத் தொழிலாளியின் கைகள், எப்படி எப்படியெல்லாம் உருமாறி இருக்கின்றன!

ஆலைத் தொழிலாளியின் அழகிய கைகள், இயந்திரத்தில் சிக்கிச் சீரழிந்துள்ள காட்சியைக் கண்டபோது நெஞ்சம் துணுக்குறுகிறது. ஆயிரமாயிரம் கருவிகளைப் படைத்த அந்தக் கையின் விரல்கள் நசுக்குண்டு, வெட்டுண்டு, உருமாறி.....அப்பப்பா! நம் இதயத்தையே பிழிந்தெடுக்கிறதே!

உருத்தெரியாமல் போன கை விரல்களுக்குப் புது உருவம் தந்து மீண்டும் அது உதவும்படியாக ஆக்கும் அரிய பெரிய பணியில் ஈடுபட்டிருக்கிறது சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையிலுள்ள ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை 'பிளாஸ்டிக் சர்ஜரி'— துறை.

இத்துறையிலிருக்கும் கைக் காயங்களுக்கான சிகிச்சைப் பிரிவு இந்தியாவிலேயே முதலாவதாகவும், முன்னோடியாகவும் திகழ்கிறது என்பதை நாம் பெருமிதத்துடன் இங்கே குறிப்பிட வேண்டும்.

வடசென்னை, தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். பல்வேறு சிறிய பெரிய தொழிற்சாலைகள் அங்கே ஏராளமாக உள்ளன. தங்கச்சாலை வண்ணாரப்பேட்டை, திருவொற்றியூர், மணலி போன்ற பகுதிகளிலும், மற்றும் ஐ.சி.எப். ஆவடி, அம்பத்தூர் போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இரவும் பகலும் பணியாற்றுகிறார்கள்.

இரவிலோ பகலிலோ வேலையில் ஈடுபட்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டு விடுகிறது.

ஒருவருக்கு நான்கு விரல்களும் துண்டிக்கப்பட்டு விட்டன.

பஸ் விபத்தில் ஒரு பெண்ணுக்குக் கை நசுங்கிய நிலையில் இருக்கிறது.

ஒரு தொழிலாளியின் கை சின்னாபின்னமாகக் காட்சி அளிக்கிறது.

இப்படி ஒரு நாளைக்குச் சுமார் 10 அல்லது 12 பேர் இந்த மருத்துவ மனைக்கு வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் உடனே இங்கே துரித சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதாவது 12 மணி நேரத்தில் நோயாளிக்குத் தக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கையில் காயம்பட்ட ஒருவர் இங்கே வருகிறார் என்றால், முதலில் அவருக்கு ஏற்பட்ட விபத்து பற்றிய முழுவிவரங்களும் (Out patient Hand Case record.) சேகரிக்கப்பட்டு அவை பதிவு செய்யப்படுகின்றன.

இந்தத் துறை செம்மையாக இயங்குவதற்கு இத்துறையின் பேராசிரியர் டாக்டர் ஆர். வெங்கடசுவாமி அவர்களின் தலைமையில், நான்கு மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்த ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறை இயங்கி வருகிறது. இத்துறையின் புற நோயாளி சிகிச்சைப் பிரிவு ( Out patient clinic), வாரத்தில் திங்கள், வெள்ளிக் கிழமைகளில் காலை 10 மணி முதல் 1 மணி வரை, அறை எண்: 24-ல் இயங்குகிறது.



சிகிச்சைக்கு முன்னும்



பின்னும்

புதிய நோயாளிகள் வாரத்தின் எல்லா நாட்களிலும் இம்மருத்துவ மனைக்கு வரலாம். அவர்களுடைய நோயின் தன்மையை அறியவும், துரிதமாகச் சிகிச்சை அளிப்பதற்கான யோசனைகளைக் கூறவும் இங்கே ஒரு மருத்துவ அலுவலர் நாள்தோறும் பணியாற்றுகிறார்.

இங்கே வரும் பல்வேறு நோயாளிகள் பற்றிய விவரங்கள்: உதடு பிளவுபட்டவர், தீக்காய முற்றோர், புற்று நோயாளர், கைக்காயங்கள் பட்டவர் இவர்களைப் பற்றிய தகவல்கள் ஒழுங்காகச் சீராகச் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளன. எந்த நேரத்திலும் எப்போதும் இந் நோயாளிகள் பற்றிய குறிப்புகளை (Case records) ஒரு சில நிமிடங்களில் எடுத்துவிடலாம்.

ஸ்டான்லி மருத்துவமனையிலுள்ள ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறை மூன்று பிரிவுகளாகச் செயல்படுகின்றது. அவை:

1. பெண்கள் மற்றும் குழந்தைகள் பகுதி (Women and Children Ward)

2. கைக் காயங்களுக்கான அறுவைச் சிகிச்சைக் கூடம் (Hand injury Operation Theatre)

3. காயங்களுக்கான கட்டுப் போடும் கூடம் (Dressing Theatre)

கைக்காயங்களுக்குச் சிகிச்சை பெறும் நோயாளிகள் பகுதிக்குச் செல்வோமா?

இப்பகுதி மிகவும் துப்புரவாக இருக்கிறது. அமைதி நிலவும் இந்தப் பகுதியில் சில வாசகங்கள் நம் கவனத்தைக் கவருகின்றன:

*உங்கள் கைகள் கண்களுக்கு ஒப்பானவை.

*பணியில் ஈடுபடும்போது கவனமும் சுறுசுறுப்பும் தேவை. உங்கள் மனத்தை அங்குமிங்கும் அலையவிடாதீர்கள்.

*கை விபத்துகளுக்குக் காரணம் கவனக்குறைவுதான்.

—இவை பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல அங்கே வருகின்ற அனைவருக்கும் 'இனி விழிப்புணர்ச்சி தேவை!' என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றன!

இந்த நோயாளிகள் பகுதியில், ஒரு புள்ளி விவர அட்டவணையையும் நாம் காண முடிகிறது. அதில் கைக் காயங்களுக்காகச் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாகக் குறிக்கப் பெற்றுள்ளது. அதன் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 1971 | 853 |
| 1972 | 1,110 |
| 1973 | 1,364 |
| 1974 | 2,570 |
| 1975 | 3,615 |

இவ்வாண்டில் (1976) கைக் காயங்களுக்காகப் பதிவு செய்யப் பெற்ற நோயாளிகளும், அறுவைச் சிகிச்சை பெற்ற நோயாளிகளும் பற்றிய தகவல்களை இன்னொரு அறிவிப்புப் பலகையிலிருந்து அறிய முடிகிறது.

கைக் காயங்களுக்காகப் பதிவு செய்யப் பெற்ற நோயாளிகள்:

| | | |
|---|---|---|
| ஏப்ரல் | — | 260 |
| மே | — | 231 |
| ஜூன் | — | 238 |

அறுவைச் சிகிச்சை பெற்ற நோயாளிகள்:

| | | |
|---|---|---|
| ஏப்ரல் | — | 162 |
| மே | — | 169 |
| ஜூன் | — | 166 |

கைவிரல்கள் இழந்தவர்கள் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு வேலை செய்யவும், சாப்பிடவும், எழுதவும் முடிகிறது.

பொதுவாகத் தொழிலாளிகள் விபத்துகளுக்குக் காரணம் என்ன என்பதை உணர வேண்டும்; நேரம் சரியில்லை என்றோ, விதி என்றோ கூறி சமாதானப்படுத்திக் கொள்வதைவிடக் 'கவனக் குறைவே இதற்குக் காரணம்' என்பதை உணர வேண்டும்.

ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறையில் கைக் காயங்களுக்கு மட்டுமின்றி, கண், வாய் முதலான உறுப்புகளில் ஏற்படும் புற்றுநோய்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது.

இன்னொரு முக்கிய அறுவைச் சிகிச்சையையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

பிறக்கும்போது எல்லாரும் முழுமையாகப் பிறந்து விடுவதில்லை. பிறக்கின்ற சிலருக்குச் சில குறைகள் இருக்கத்தானே செய்கின்றன?

மூக்கு சப்பையாகவோ அல்லது பெரிதாகவோ வாய் கோணலாகவோ அல்லது மேலுதடு பிளவுபட்டோ, கண் சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இப்படி உடலின் உறுப்புகள் குறைந்தும் மிகுந்தும் காணப்படுகின்றன.

பிறவிலேயே சிலருக்கு உதடு கோணலாகவோ, இரண்டாகப் பிளவுபட்டோ அமைந்து விடு

கிறது. இந்தக் குறைபாடு 770 பேருக்கு ஒருவர் வீதம் உள்ளதாம்.

இந்தக் குறை உள்ளவர்கள் மற்றவர்களைப் போல நாமும் அழகாக இருக்க முடியவில்லையே என்று எண்ணி ஏங்குவதுண்டு, அந்த ஏக்கத்திலேயே காலத்தைக் கழிப்பதுண்டு.

அத்தகையவர்கள் — உறுப்புக் குறைபாடுள்ளவர்கள்—அந்தக் கவலை இல்லாமல் வாழ்வதற்கு ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறை அவர்களுக்கு உதவ முன் வருகிறது.

அதன் மூலம் சப்பை மூக்கு உள்ளவர் சரியான அழகிய மூக்கைப் பெறலாம்; உதடு பிளவுபட்டவர் ஒழுங்கான உதடு பெற்று மகிழலாம்.

எம். எஸ். அறுவைச் சிகிச்சைக்காகத் ( M. S. General Surgery ) தம்மைப் பதிவு செய்திருக்கும் பட்டமேற்படிப்பு பட்டதாரிகள், இத்துறையில் ஒரு மாதக் காலம் பயிற்சி பெற நியமிக்கப்படுகின்றனர். பயிற்சிக் காலத்தில் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சையின் அடிப்படை நுட்பங்கள் கற்பிக்கப்படுகின்றன. இது சம்பந்தமான முக்கிய சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்படுகின்றன.

ஸ்டான்லி மருத்துவ மனையிலுள்ள இத்துறையில், பட்டமேற்படிப்புப் பட்டதாரிகள் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சையில் பயிற்சி பெறுவதற்குப் போதுமான வசதிகளும், பரிசோதனைக் கூடங்களுக்கான கருவிகளும் உள்ளதால், ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சையில் எம். சிஎச்., படிப்பு ( M. Ch., Course ) ஒன்றைத் துவக்குவதற்கான தீர்மானம் முன் வைக்கப்பட்டுள்ளது.

இங்கு மிக்கப் பயனுள்ள ஒரு நூலகம் காட்சி தருகிறது. இந்நூலகத்தில் ஆண்டுதோறும் புதிய புதிய நூல்கள் சேர்க்கப்படுகின்றன. ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை சம்பந்தமான 150 அரிய நூல்கள் இந்நூலகத்தில் உள்ளன. இச்சிகிச்சை சம்பந்தமான இதழ்களும் தருவிக்கப்படுகின்றன.

இந்தத் துறை பல்வேறு இடங்களில் நடைபெறும் விஞ்ஞானக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு, ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை சம்பந்தமான பயனுள்ள கட்டுரைகளை வழங்கியிருக்கின்றது.

# பிளாஸ்டிக் சர்ஜரி.....

விஞ்ஞானம் தந்த நன்கொடைகளில் ஒன்று இந்த ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை! இந்தச் சிகிச்சையே புதுமையானதுதான். பாதிக்கப்பட்ட கைவிரல்கள் புது வடிவம் பெறுவது நமக்கு விந்தையாகவே இருக்கிறது. இந்த அறுவைச் சிகிச்சையை எப்படிச் செய்கிறார்கள்?

அறுந்து விழுந்த விரல் என்றால் அதை அதே இடத்தில் வைத்துப் பொருத்தி விடலாம். கையே நசுங்கிவிடுகிறது என்றால்? கை விரல்களில் சில பாதி அளவுக்குத் துண்டித்து விடுகிறது என்றால்?

'தன் கையே தனக்கு உதவி' என்பது போல இந்தச் சிகிச்சைக்கு நம் உடலே நமக்கு உதவி செய்கிறது. ஆம். நம் உடலில் உள்ள சதையே இவ்வாறு ஒட்டுவதற்கு உதவுகிறது. தொடை போன்ற சதைப்பற்றுள்ள இடங்களிலிருந்து தேவையான அளவு சதையை எடுத்து இந்த ஒட்டுறுப்பு அமைக்கப்படுகிறது.

'பிளாஸ்டிகா' (Plastica) என்ற கிரேக்கச் சொல் "மோல்டபிள்' (Mouldable) என்னும் பொருளில் வழங்கப்பெறுகிறது. 'மோல்டபிள்' என்றால் உருவம் கொடுக்க உதவுவது என்று பொருள். கைவிரல் போன்று உருவம் கொடுத்து அல்லவா இந்தச் சிகிச்சையையே செய்கிறார்கள்?

பாதிக்கப்பட்ட கைவிரலுக்கு பதில், தொடையிலிருந்து சிறிது சதை எடுத்துப் பொருத்திவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அந்த விரலுக்கு உணர்ச்சிகள் இருக்குமா?

இருக்கும். ஏற்கெனவே பாதிக்கப்பட்ட விரலிலுள்ள உணர்ச்சி நரம்புகளை இணைத்தே அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. நாளாவட்டத்தில் அந்த விரலுக்கும் உணர்ச்சிகள் வந்துவிடும்.



சிகிச்சைக்கு முன்னும்



பின்னும்

இவ்வாறு குறை உறுப்பு உள்ளவர்களின் குறைவை நீக்கி மன நிறைவை உண்டாக்கி-இருளடைந்த அவர்கள் வாழ்க்கையிலே ஒளிவிளக்கேற்றி வைக்கிறார்கள் மருத்துவர்கள் என்பதை எவரும் மறுத்துக் கூற முடியுமா?

—பி. வி. கிரி.

அறிமுகப்படுத்துகிறோம்

# விவசாயிகள் அதிக லாபம் அடைய மூன்று நிரூபணமான வழிகள்

## மிகச் சிறந்த பயிர் பாதுகாப்பு முறை

### ® பாவிஸ்டின் WP

**ஊடுருவிச் செயலாற்றும் பூசணக்கொல்லி**

50க்கும் அதிகமான பயிர்களில் 150க்கும் மேலான நோய்களை— குறைந்த செலவில்— தடுக்கிறது மற்றும் குணப்படுத்துகிறது. விதை, மண், காற்று முதலியன மூலம் பரவும் பலவகைப் பூசணங்களையும் கட்டுப்படுத்துகிறது.

100 கிராம் பாட்டில்கள்




## தக்க காலத்தில், திறம்பட களைகளைக் கொல்லும் வழிவகுத்தல்

### ® பாஸாலின் EC

**பகுத்துச் செயலாற்றும் களைக்கொல்லி**

களைகள் வெளிவரும் முன்பே அவற்றை அழிக்கிறது. களைகளுக்கு கொடிய நஞ்சானாலும், பயிர்களுக்கு மிகப் பாதுகாப்பானது. விளைச்சலை 30% முதல் 50% அதிகரிக்க உதவுகிறது.

100 மில்லி பாட்டில்கள்



G.2.76 TAM

## பயிர் வளர்ச்சியை சீராக்கும் வழி

### ® லிஹோஸின் AS

**பயிர் வளர்ச்சி சீரணி**

தேவையில்லாத தாவரப் பொருள் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது; பயிர் ஒரேசீராக முதிர்ச்சியடைய உதவுகிறது. வறட்சிநிலைகளிலும் பயிர்கள் செழித்து வளர துணைபுரிகிறது.

100 மில்லி பாட்டில்கள்




சிறந்த பலன்களைப்பெற, இந்த உயர்தர, நவீன தயாரிப்புகளின் சரியான உபயோக முறைகளை தெரிந்துகொள்ளுங்கள்— உங்கள் பணத்திற்கு அதிக லாபம் பெறுங்கள். இன்றே உங்கள் அருகாமையிலுள்ள ஷா வாலஸ் விற்பனையாளரிடம் முழு விவரங்களையும் கேட்டறியுங்கள்.

Agrochemicals of our time
BASF



BASF PRODUCTS Marketed by SHAW WALLACE

# நீர் வளம் பெருக்கி நிலவளம் பெருக்குவோம்!



பரந்த பரப்பிற்கு நீர்ப்பாசன வசதியை விரைந்து விரிவாக்குவதே இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் 7-வது அம்சக் குறிக்கோளாகும். இக்குறிக்கோளுக்கு ஏற்பவே, தமிழ்நாட்டின் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நடப்பாண்டிற்கு ஏறத்தாழ ரூபாய் 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை 1975-76 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபாய் 19.69 கோடியை விட 25 சதம் அதிகமாகும்.

தமிழ்நாட்டில் மழையினால் கிடைக்கும் மேல்மட்ட நீர் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிடைக்கின்ற நீரைச் சிறந்த முறையில் பயன்படுத்தவும், மேலும் புதிய பகுதிகளுக்கு பாசனவசதி ஏற்படுத்தவும் வேண்டி, தற்பொழுதுள்ள பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. நீர்வளம் பெருக்கி நிலவளம் பெருக்க வேண்டுமென்பதற்காக, முடிவு பெறாமல் உள்ள நீர்ப்பாசனத் திட்டப் பணிகளை விரைவாகவும், திறமையாகவும் முடித்திடுவதில் தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

## சிறு பாசனத் திட்டங்கள்

சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காக 1975-76-ஆம் ஆண்டில் ரூபாய் 310 கோடி செலவிடப்பட்டதற்கு மாறாக, 1976-77-ஆம் ஆண்டில் ரூபாய் 500 இலட்சம் செலவிடப்படும். இது, சென்ற ஆண்டில் செலவிடப்பட்டதைவிட 78 சதம் கூடுதலாகும். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் முடிவுறாமல் பாக்கியுள்ள சிறுபாசனத் திட்டங்களை விரைந்து முடித்திடுவதற்கும், வறட்சியைத் தாங்கிக் கொள்ள உதவுதல், அதிக உற்பத்தி, பெரும்பான்மையினர்களுக்குப் பயன்தருவதாக உள்ளது போன்ற நிலையான பயன்தரக் கூடிய திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இதனால் 16,000 ஏக்கர் நிலப்பரப்புக்குக் கூடுதலாகப் பாசனவசதி ஏற்படும்.

## நடுத்தரப் பாசனத் திட்டம்

நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக 1976-77-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 18.67 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீடு 1975-76-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 15.68 கோடியை விட 20 சதம் அதிகமாகும். இந்திய அரசின் அனுமதி வேண்டி 7 நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் 3 திட்டங்களின் வேலை விரைவில் துவக்கப்பட உள்ளன.

முன்பே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பின்கண்ட 4 திட்டங்களின் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

| திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பாசன வசதி பெறவிருக்கும் பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. வறட்டுப் பள்ளம், கோவை மாவட்டம். | 30 | 1,670 |
| 2. குண்டேரிப்பள்ளம், கோவை மாவட்டம் | 15 | 1,140 |
| 3. வராக நதி, மதுரை மாவட்டம். | 30 | 5,200 |
| 4. வட்டமலைக்கரை ஓடை, கோவை மாவட்டம். | 15 | 2,960 |

இந்நான்கு திட்டங்களின் மூலம் கூடுதலாக 10,970 ஏக்கருக்குப் பாசனவசதி கிடைக்கும்.

## நிலநீர்

நிலநீர் ஆய்வுப் பணிகளுக்காக 1976-77-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 247.16 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவு நிலநீர் ஆய்வு 7 வட்டாரங்களில் முன்னேற்ற நிலையில் உள்ளது. 9 வட்டாரங்களில் முடிந்துள்ளது.

கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும், தண்ணீர் பற்றுக்குறையைத் தவிர்க்கவும், தமிழ்நாடு நிலநீர்த் துறை 2,000 கிணறுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின்கீழ், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், அவசர அடிப்படையில் 1976 ஏப்ரல் முதல் ஜூன் வரை 2,400 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு அரசு தற்பொழுது 2,000 கிணறுகளை ரூபாய் 40 இலட்சத்தில் ஆழப்படுத்திடுவதற்காக அனுமதியளித்துள்ளது.

கேரள மாநிலத்தில் உற்பத்தியாகி, மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக்கடலில் பயனின்றிக் கலக்கும் ஆறுகளின் தண்ணீரைத் திருப்பி தமிழகத்தைச் செழிக்கச் செய்வதற்கான பேச்சு வார்த்தைகளைக் கேரள மாநில அரசுடன் துவக்கிடத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு விரைந்து மேற்கொண்டு வரும் இத்தகைய பணிகளில், தமிழ்நாட்டில் விரைவாக நீர்வளம் பெருகி, நிலவளம் செழிக்கும் என்பது திண்ணம்.



# கிராமப்புற வளர்ச்சியில் சமுதாய நோக்குடைய காடுகளின் பங்கு



கே. ஏ. போஜா ஷெட்டி
வனத்துறைத் தலைவர் (பொது)
தமிழ்நாடு

மரங்கள் அடர்ந்துள்ள பகுதி காடு என்று அழைக்கப்பெறும். அது இயற்கையான காடு, செயற்கையான காடு என வகைப்படுத்தப்படும். செயற்கையான காடு மனித முயற்சியால் உருவாக்கப்படுவது.

**சமுதாய நோக்குடைய காடுகள் :**

செயற்கைக் காடு ஒரு பயன் நோக்கி வளர்க்கப்படும் போது சமுதாய நோக்குடைய காடு என அழைக்கப்படுகிறது. இதன் தனிச் சிறப்பு என்ன வென்றால், இது மக்களுக்காக மக்களால் வளர்க்கப்படுதலே யாகும்! 'சமுதாய நோக்குடைய காடுகள்' என்ற தொடரில் காடுகள் என்ற சொல் மரக் கூட்டத் தொகுதிகளை மட்டும் குறிக்காமல், அவை சமூகத்தில் விளைவிக்கும் பல் வேறுபட்ட பயன்களையும், பாதிப்புகளையும் உணர்த்தி நிற்கிறது எனக் கருதல் வேண்டும்.

வேளாண்மைத் தேசியக் குழு (The National Commission on Agriculture), ''சமுதாய நோக்குடைய காடுகள்—இடைக்கால அறிக்கை 1973'' என்ற தன்னுடைய அறிக்கையில், பின்வரும் வகைப்பாடுகளைச் சமுதாய நோக்குடைய காடுகளின் வகைகளாக அமைத்துக் காட்டியுள்ளது!

(அ) பண்ணைகளிலும் தனியார் நிலங்களிலும் பண்ணைக் காடுகள் வளர்த்தல்.

(ஆ) ஊராட்சி நிலங்கள், புறம்போக்கு நிலங்களில் பழ மரம், விறகு மரம், தழை மரம், புல்வெளி முதலிய வளர்த்தல், காற்றரிப்பு (Shelter Belts) தடை மரங்கள் வளர்த்தல்; ஆறு; கால்வாய்க் கரைகள், சாலை, புகை வண்டிப் பாதை ஆகியவற்றின் ஓரங்களில் மரங்கள் வளர்த்தல் ஆகிய மிகைக் காடுகள் (Extension Forestry) ஏற்படுத்தல்.

(இ) பாழ்பட்ட காட்டுப் பகுதிகளில் மரம் வளர்த்தலைப் புதுப்பித்தல்.

(ஈ) இன்பப் பொழுதுபோக்கிற்குப் பயன் தரும் வகையில் காடுகளைப் பாதுகாத்தல்.

எனவே, குறிப்பிட்ட நிலம் என்று இல்லாமல் வாய்ப்பான நிலங்களில் எல்லாம் பசுமைத் தோற்றத்தை உருவாக்குவது இதன் பொதி பொருள் எனலாம்.

நம் நாட்டில், காடு வளர்ப்புக் கலை, இது நாள் வரை பெரிதும் அரசு சார்ந்ததாக—அரசுக் காப்புக் காடுகளின் எல்லைக்குள் நடைபெற்று வருவதாக — இருந்து வந்துள்ளது. ஆனால், சமுதாய நோக்குடைய காடுகள் வளர்ப்புத் திட்டம், சமூக நிலங்கள், ஆற்றங்கரைகள், கால்வாய் பகுதிகள், சாலை ஓரங்கள், பண்ணைகள், வளாகங்களைத் தழுவி அதன் எல்லையை மேலும் விரிவுபடுத்துகிறது. அதற்கு மேலே, இத்திட்டம் மக்களது சிறந்த பங்கினையும் உட்கொண்டு விளங்குகிறது!

**நாட்டுப்புற வளர்ச்சிக்குத் துணையாதல் :**

கானியல் பணி, மிகுதியும் தொழிலாளர்கள் தீவிரமாகப்

பங்கேற்கும் பணியாகும். இப் பணிக்காகச் செலவிடப்படும் தொகையில் எண்பது விழுக்காடு (80 சதம்) உடலுழைப்பாளர்களுக்கு ஊதியமாகவே (கூலி) செலவழிகிறது. இதிலிருந்து, கானியல் பணி, நாட்டுப்புற மக்களுள், வேலையில்லாத அல்லது வேலை குறைந்த ஆட்களுக்குக் கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்பைத் தரக்கூடும் என அறியலாம். மேலும், கிராமங்களில் பயன் கொள்ளப் பெறாமல் கிடக்கும் நிலங்களிலும், தனியாருடைய நிலங்களிலும் மரம் வளர்ந்தால், அது, எரு, தீவனம், மரம், விறகு முதலியவற்றின் வளர்ந்து வரும் தேவையை நிறைவு செய்யத் துணை புரியும். மர வகைகள் ஊர்ப் புறத்தே சிறிய பெரிய தொழில்கள் உருவாவதற்கான மூலப் பொருள்களை வழங்குவதுடன், நாட்டுப்புறத் தொழில் வளர்ச்சிக்கு நல்ல துணை செய்யும். கூடை, பாய், பொம்மை, பென்சில், தீக்குச்சி, நறுமணப் பொருள்கள், உண்ணத்தகா எண்ணெய், காகிதம், அட்டைப்பலகை, செயற்கைப் பட்டு முதலிய பொருள்களை உருவாக்கும் தொழில்கள் காடுபடு பொருள்களைச் சார்ந்தன என்பதை இங்கே நினைவு கூர்க. மரச்செறிவு, மழை நீர் விரைந்து உலர்தலைத் தடுத்து மண்ணில் ஈரப் பசையைத் தங்கச் செய்வதால், ஊர்ப் புறக் காடுகள் வேளாண்மைத் தொழிலுக்கும் உதவுகிறது. இவை மண்ணரிப்பைத் தடை செய்யும் ஆற்றல் வாய்ந்த தடைகளாகவும் விளங்குகின்றன. பசுமையான இலைகள் முதன்மையான தழை எருவாகும்!

**தமிழ் நாட்டில் சமுதாய நோக்குடை காடுகள் :**

தமிழ் நாட்டில் வளர்க்கப்படும் சமுதாய நோக்குடை காடுகளைப் பொதுவாகக் கீழ்வருமாறு வகைப் படுத்தலாம்.

1. புறம்போக்கு நிலங்களில் காடு வளர்ப்பு.

2. ஆற்றங்கரை, கால்வாய்க் கரைகளில் மரம் வளர்ப்பு.

**புறம்போக்கு நிலங்களில் காடுகள் :**

பயிர் செய்யத் தக்க புறம்போக்கு நிலம், தரிசு நிலம், பயிர் செய்யப் பயன்படாத நிலம் என்று வகைப்படுத்தப்படும் நிலங்கள் அனைத்தும் காடு வளர்ப்புக்கு ஏற்றவையே. இந்நிலங்கள் அரசு நிலங்களாகவோ, ஊராட்சி நிலங்களாகவோ இருக்கின்றன. 1956-60-இல் வனத்துறை மேற்கொண்ட பூர்வாங்கமான நில அளவை மதிப்பீட்டின் படி, தமிழ் நாட்டில் பயன் கொள்ளப் பெறாமல் கிடக்கும் காடு வளர்ப்புக்கு ஏற்ற நிலப் பரப்பு ஏறக் குறைய ஐந்து இலட்சம் எக்டேராகும்! எனவே 60-61-ஆம் ஆண்டில் முன் மாதிரியாக மூன்று மாவட்டங்களில் காடு வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. பிறகு தொடர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ், இக்காடு வளர்ப்புப் பணி மற்ற மாவட்டங்களிலும் மேற்கொள்ளப் பெற்று முதன்மைப்படுத்தப் பெற்றது. 1975-ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 55,000 எக்டேரில் 180 இலட்சம் ரூபாய் செலவில் மர வளர்ப்புப் பணி முடிக்கப்பட்டுள்ளது. இம் மர வளர்ப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலங்கள் பெரும்பாலும் ஏரிக்கரை முனங்குகளே (ஏரிக்கரையோரப் பகுதிகள்)! இங்கே கரு வேல மரங்கள் செழித்து வளர்ந்து நல்ல பயனைத் தந்தன. தாழ்ந்த மலைச் சரிவுகளில் பரம்பை, ஓடை, செம்மரம், வாகை, ஆச்சா மரங்கள் வளர்க்கப்பட்டன. 1,500 மீட்டர் உயரத்திற்கு மேம்பட்ட சரிவு நிலங்களில் பொதுவாக நீலகிரி தைல மரங்களும், 'வாட்டில்' மரங்களும் வளர்க்கப்பட்டன.

**ஆறு, கால்வாய்க் கரை காடுகள் :**

பல ஆண்டுகளாகக் காவேரி, கொள்ளிடம் ஆற்றங்கரைகளின் சில பகுதிகளில் மட்டும் வனத்துறையால் சவுக்கு வளர்க்கப்பட்டு வந்தது. ஆனால், திட்டமிட்ட அடிப்படையில், தஞ்சை, திருநெல்வேலி, திருச்சி மாவட்டங்களில் கால்வாய்ப் பகுதிகளில் மரம் வளர்த்தல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1956-இல் தான் மேற்கொள்ளப்பட்டது. பின்னால் இத்திட்டம் மற்ற மாவட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தேக்கும் 'சிசு'வும் முதன்மையாகவளர்க்கப்பட்டன. 1975-ஆம் ஆண்டு வரை 49.50 இலட்சம் ரூபாய் செலவில் 10,500 எக்டேரில் இத்திட்டத்தின் கீழ் மரங்கள் வளர்க்கப்பட்டன.

**தனியார் நிலங்களில் காடுகள் :**

சமுதாய நோக்குடைய காடுகளை வளர்த்தல் என்பது தமிழ் நாட்டு உழவர் பெருமக்கள் அறியாத ஒன்று அன்று. அவர்கள் தம்முடைய நிலங்களில் சவுக்கு வளர்ப்பதை யாரும் காணக் கூடிய ஒன்று ஆகும். ஆயினும், தனியார் நிலங்களில் மரம் வளர்த்தலுக்கு இன்னும் வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. குறிப்பிட்ட நிலம் என்று இல்லாமல், வீட்டைச் சுற்றிய இடைவெளிகளிலும், கிணற்றுப் பகுதிகளிலும், வரப்புகளிலும் மரங்களை வளர்க்கலாம். காற்று அரிப்புக்கு இலக்காகும் இடங்களில், காற்றுத் தடைகளாக மரங்களை வளர்க்கலாம். சில நேரங்களில், ஓரளவுக்கே பயன் தரும் உழவு சார்ந்த பயிர்களை விடுத்து, மரங்களை வளர்த்தல் நல்ல ஆதாயம் தரக்கூடியதாக அமையும்.

**மக்களை ஈடுபடுத்தும் மாபெரும் திட்டம் :**

சமுதாய நோக்குடை காடுகளை வளர்த்தல் என்பது மக்களை ஈடு





படுத்தும் மாபெரும்திட்டமாகும். அண்மையில் கானியல் மையக் குழு ( Central Board of Forestry ) விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கஇத்திட்டம்நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி, தமிழ்நாடு முழுதும் இந்த ஆண்டு மரம் வளர்க்கும் பணி பெரிய அளவில் துவக்கப்பட்டுள்ளது. தனியார் நிலங்கள், பள்ளிக்கூடம், கல்லூரி, அரசு அலுவலகங்கள், பிற நிறுவனங்கள் சார்ந்த இடங்கள், சாலை ஓரங்கள், ஊராட்சி நிலங்கள் முதலிய பகுதிகளில் வாய்ப்பான மரம் வளர்க்கக் கான் துறையும் வேளாண்மைத் துறையும் சுமார் 40 இலட்சம் நாற்றுகளையும் கன்றுகளையும் வளர்க்கின்றன. இந்தப் பெரிய அளவான ஏற்பாடு தமிழ்நாட்டின் புகழ் பெற்ற பசுமைத் தோற்றத்தைப் புதுப்பிக்கவே மேற்கொள்ளப்பட்டுள்ளது இப்பணியில் அரசுத் துறைகளும், மாணவர்களும், பொது மக்களும் ஈடுபடுவது சிறப்பான செய்தியாகும்.

ஒரு நாட்டின் நிலப்பரப்பில் குறைந்தது 33 விழுக்காடு காடாக இருக்க வேண்டும் என்பது யாவரும் ஒப்பும் கருத்தாகும். அவ்விழுக்காட்டு அளவிற்குக் குறைந்தளவு பரப்பே காடாகவும், காடுபடு பொருள் வளம் — குறிப்பாக வறண்ட பகுதிகளில் உள்ள காடுபடு பொருள் வளம் — குறைவாகவும் உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களில், சமுதாய நோக்குடைக் காடுகள் வளர்ப்பு, காட்டின் பரப்பை மிகுவிப்பதில் மிகுந்த பங்கு பெற முடியும். மேலும், மாநிலத்தில் பரவலாக இருக்கும் வறட்சியைத் தணிவிக்கும் தொலைநோக்குள்ள முனைப்பான பணியாகவும் இது அமையும். இங்கே முதன்மையாகக் கருத வேண்டியது யாது எனில், சமுதாய நோக்குடைய காடுகள் வளர்க்கும் திட்டம், உழவர்களால், மாணக்கர்களால் மக்களால், ஏன் ஒவ்வொரு குடிமகனும் செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும் என்பதே! இது, காடுகளைக் காத்துச் சுற்றுப்புறச் சூழலைப் போற்றும் புதிய விழிப்புணர்வை அவர்களிடத்து ஏற்படுத்தும் என நம்பலாம்.


# பிளாநோபிக்ஸ்*

## பழம், காய்கறி பயிரிடுவோருக்கு ஒரு வரப்பேறு.

பட்டாணி, கத்தரி, தக்காளி, பப்பாளி, கொய்யா, மா, அன்னாசி, திராட்சை, மற்றும் இதர் காயகறி, பழப் பயிர்களுக்கு பிளாநோபிக்ஸ் பேருதவியாக இருக்கிறதென்று ஊர்ஜிதப்படுத்தும் அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.



விவரமான தகவல்களை விசாரித்தறியவும்.

பிளாநோபிக்ஸ் என்பது, தோட்டக்கலைக்கும் விவசாயத்திற்குமான மே & பேக்கர் பிராண்டு தயாரிப்பு.

* டிரேடு மார்க்

M&B May & Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.
பம்பாய . கல்கத்தா . கவுஹாத்தி . இந்தோர்
லக்னோ . சென்னை . நியூ டெல்லி . பாட்னா

TAMIL



# தொட்டியிலும், மரப் பெட்டியிலும், மாடியிலும் காய்கறி பயிரிடலாம் !

—R. மாணிக்கம்

வீட்டுத் தோட்டம் அமைத்துக் காய்கறிச் செடிகளை வளர்க்க ஆர்வம் இருப்பினும், இடம் இல்லையே என்று நகரங்களில் உள்ள பலர் கவலைப்படக்கூடும்!

இடம் இல்லை என்று கவலைப் பட வேண்டாம்!

**தொட்டிகளிலும்,**
**மரம்பெட்டிகளிலும்,**
**கூடைகளிலும்,**
**வீட்டுக் கூரைகளிலும்,**
**குடிசைகளிலும்,**
**மாடிகளிலும்,**
**வராந்தாக்களிலும்,**
**வீட்டிற்குள்ளும்,**
**உடைந்த பானைகளிலும்,**
**காலி டப்பாக்களிலும்,**
**தொங்கும் தொட்டிகளிலும்,**
**வேலியிலும்**
**காய்கறிச் செடிகளைப் பயிரிடலாம்!**

## எப்படி?

### 1. தொட்டிகளில் காய்கறி பயிரிடும் முறை:

மண்தொட்டிகளையோ அல்லது சிமெண்டு தொட்டிகளையோ உபயோகியுங்கள்.

தொட்டிகளின் அடிப்பாகத்தில் 1 அல்லது 2 துவாரங்களை ஏற்படுத்துங்கள்.

தொட்டிகளின் அடிப்பாகத்தில், ஒரு அடுக்கு சிறு கற்களையோ அல்லது கூழாங்கற்களையோ நிரப்புங்கள்.

அதன் மேல் உடைந்த ஓடுகளைப் பரப்புங்கள்.

ஓடுகளின் மேல் சிறிது நல்ல மணலைப் பரப்புங்கள்.

மணலின் மேல், பின்கண்டவைகள் கலந்த கலவை மண்ணைப் போட்டுத் தொட்டியில் முக்கால் அளவு வரை நிரப்புங்கள்.

| | | | |
|---|---|---|---|
| செம்மண் | ... | 2 | பாகம் |
| தொழு எரு அல்லது கலவை எரு | ... | 2 | பாகம் |
| ஆற்று மணல் | ... | 1 | பாகம் |
| இலைமக்கு | ... | 1 | பாகம் |

இவ்வாறு நிரப்பப்பட்ட தொட்டிகளில் தக்காளி, கத்தரி, மிளகாய் போன்றவற்றின் நாற்றுகளை நடுங்கள்.

ஒவ்வொரு தொட்டியிலும் 1 அல்லது 2 நாற்றுகளை நடுங்கள்.

தொட்டிகளைக் காயவிடாமல் 3 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் ஊற்றுங்கள்.

தக்காளி, பட்டாணி ஆகியவைகளுக்கு கம்புகள் அல்லது குச்சிகளில் இணைத்துக் கட்டி வளர விடுங்கள்.

நாற்று நட்ட 30-ஆம் நாள் ஒரு தேக்கரண்டி அளவு 6:12:12 கலப்பு உரத்தை ஒவ்வொரு தொட்டிக்கும் போடவும்.

இதுபோலவே மீண்டும் பூக்கள் தோன்றுவதற்கு முன் போடவும்.

அல்லது நாற்று நட்ட ஒரு மாதத்திலிருந்து 15 நாட்களுக்கு ஒருமுறை ஒரு அவுன்சு (28கிராம் 6:12:12 கலப்பு உரத்தை 4.5 லிட்டர் (1 காலன்) தண்ணீரில் கரைத்துப் போதிய அளவு ஒவ்வொரு தொட்டியிலும் ஊற்றி, செடிகளை வளமாக வளரச் செய்யுங்கள்.

பூச்சிகளைத் தடுக்க நாற்று நட்ட 15 நாட்களில் தொடங்கி 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 3 அல்லது 5 தடவை என்ட்ரின் (1 மில்லி லிட்டர் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது டி. டி. டீ. 50 சத மருந்தை (2 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) செடிகளின் மேல் தெளியுங்கள்.

பெரிய தொட்டிகளில் புடலை விதைகளை ஊன்றி, வளர்த்து, கொடிகள் படர, தொட்டிகளில்

கம்புகளை நட்டுப் பந்தல் அமையுங்கள்.

நல்ல பலன் பெற, தொட்டிகளில் உள்ள மண்ணை ஆண்டிற்கு ஒரு முறை மாற்றுங்கள்.




**2. கூடைகளிலும், காலி டப்பாக்களிலும் உடைந்த பானைகளிலும் பயிரிடலாம்:**

கூடைகளில் துவாரம் இருப்பதால், கூடைகளிலும் மேற்கூறியபடி கல், மண் ஆகியவைகளை நிரப்பிக் காய்கறி பயிரிடலாம்.

காலி டப்பாக்களின் அடியில் துவாரம் செய்துவிட்டு மேற்கண்டபடி நிரப்பியும் காய்கறி பயிரிடலாம்.



இதே முறையில் உடைந்த பானைகளிலும் காய்கறி பயிரிடலாம்.

**3. மரப்பெட்டிகளில் சாகுபடி செய்யும் முறை:**

மரப்பெட்டியின் உட்புறம் தண்ணீரால் பாதிக்கப்படாமல் இருக்க 'வார்னிஷ்' பூசுங்கள்.

அடிப்பாகத்தில் துவாரம் செய்து நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்துங்கள்.

மரப்பெட்டிகளை நிற்க வைப்பதற்காக 4 பக்கத்திலும் கால்களைப் பொருத்துங்கள். இல்லையேல் உருளைகளைப் பயன்படுத்துங்கள்.

அதோடு மற்ற இடங்களுக்கு நகர்த்திச் செல்வதற்கு வசதியாக நாற்புறமும் கைப்பிடி அமைத்துக் கொள்ளுங்கள்.

மரப்பெட்டியில் முக்கால் அளவு உயரம் வரை அடிப்பாகத்திலிருந்து முறையே கற்கள் ஓடுகள் மணல், கலவை மண் ஆகியவைகளைப் போட்டு நிரப்புங்கள்.

பெரிய மரப்பெட்டிகளில் (75 செ. மீ. நீளம், 45 செ. மீ. அகலம், 50 செ. மீ. உயரம்) கத்தரி, தக்காளி, முட்டைக் கோஸ் போன்றவற்றின் நாற்றுகளை 30 செ. மீ. முதல் 40 செ. மீ இடைவெளி விட்டு நடுங்கள்.

குறைந்த உயரமுள்ள (20 செ. மீ. முதல் 30 செ. மீ. வரை) மரப்பெட்டிகளில் தண்டுக்கீரை, புதினா, அரைக்கீரை, கொத்தமல்லி, வெந்தயக் கீரை ஆகிய குறுகிய காலக் கீரை வகைகளை சாகுபடி செய்யலாம்.

எத்தகைய அளவு மரப் பெட்டிகள் கிடைத்தாலும் காய்கறிச் சாகுபடி செய்ய முயலுங்கள்

**4. குடிசைகளின் மேலும், வீட்டுக் கூரைகளின் மேலும் பயிரிடும் முறை:**

பூமியில் பறங்கி, பூசணி, சுரை போன்றவற்றை வளர்த்து அவைகளின் கொடிகளை குடிசைகளின் மேலும், கூரை வீடுகளின் மேலும் ஏற்றி, படரவிட்டு, ஏராளமான காய்களை கிராமத்தவர்கள் பெறுகிறார்கள்.



அதுபோலவே நகரங்களில் உள்ள குடிசைகளின் மேலும், கூரை வீடுகளின் மேலும் காய்கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

### 5. மாடிகளில் காய்கறிச் செடிகளைப் பயிரிடும் முறை:

மாடிகளின் மேல் தளத்தில் குறுகிய அகலமுள்ள நீண்ட பாத்திகளை சிமெண்டினால் கட்டுங்கள்.

அப்பாத்திகளில் போதிய அளவு மண்கலவையை இட்டு கத்தரி, தக்காளி, வெண்டை, கொத்தவரை, மிளகாய் ஆகியவைகளைப் பயிரிடுங்கள்.

மழைக் காலத்தில் முட்டைக் கோஸ், பூக்கோஸ், டர்னிப், பீட்ரூட் போன்றவற்றைப் பயிரிடுங்கள்.

மொட்டை மாடிகளில் பந்தல் போட்டு அல்லது கயிறுகளால் வலைபோல் அமைத்து, அதில் தொட்டியில் வளர்க்கப்பட்ட பீர்க்கு, புடல், சுரை, பாகல் ஆகியவற்றைப் படர விடுங்கள்.

நகரங்களில் உள்ள மொட்டை மாடிகளிலும், கீழே பூமியில் வளர்க்கப்பட்ட செடிகளை கம்பிகள் அல்லது கயிறுகள் மூலம் ஏற்றி, கயிறுகளால் வலைகள் அல்லது பந்தல் அமைத்து அதன் மேல் கொடிகளைப் படரவிட்டுக் காய்கறிச் செடிகளைப் பயிரிடுங்கள்.

### 6. வராந்தாக்களில் காய்கறி பயிரிடும் முறை:

வீட்டின் வெளிப்புற, உட்புற வராந்தாக்களில் சூரிய வெளிச்சம் படுமானால், பாகல், பசலைக் கீரை போன்றவைகளைத் தொட்டிகளில் வளர்த்து, மூங்கில் தட்டிகளில் படர விடுங்கள்.

### 7. வீட்டிற்குள்ளும் பயிரிடும் முறை:

வீட்டிற்குள்ளே நிழலிலும் வளர்ந்து பலனளிக்கக்கூடிய பசலை (BASELLA) சிலோன் பசலை (CEYLON SPINACH), ஆகியவைகளைத் தொட்டிகளில் வளர்த்துப் பயன் பெறுங்கள்.

இதனால் வீட்டிற்குப் பசுமை கொண்ட அழகும், உங்கள் உணவிற்கு வேண்டிய கீரைகளும் கிடைப்பதால் மகிழ்ச்சியும், நல்வாழ்வும் கிடைக்கும்.

### 8. தொங்கும் தொட்டிகளில் பயிரிடும் முறை:

தொங்கும் பெரிய தொட்டிகளில் பூச்செடிகளுக்குப் பதிலாக தவசிக்கீரை, கொடிப் பசலை போன்ற நிரந்தரப் பலன் தரும் கீரை வகைகளைப் பயிரிட்டு அழகும், பயனும் பெறுங்கள்.

தொங்கும் சிறு தொட்டிகளில் 'சிலோன் பசலை' வளர்த்துப் பயன் பெறுங்கள்.

### 9. வேலியில் பயிரிடும் முறை:

வீட்டைச் சுற்றியுள்ள வேலிகளில் கொடி வகைக் காய்கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

மேற்கூறிய ஒன்பது வகைகளில் காய்கறி பயிரிட்டால் காய்கறிகளுக்காகும் செலவும் குறையும்!

சிறந்த பொழுது போக்காக அமையும்! வாழ்வும் வளம் பெறும்!



### வேண்டுகோள்

வீட்டுத் தோட்டம் அமைப்பது நாட்டிற்கு நல்லதோர் சேவையாக இருப்பதால் மேற்கண்ட முறைகளைப் பின்பற்றிக் காய்கறி உற்பத்தியைப் பெருக்கி, காய்கறிக்காக ஆகும் செலவைக் கணிசமாகக் குறைத்துக் கொள்ளுங்கள்.

வீட்டுத் தோட்டம் அமைப்பதிலும், காய்கறிச் சாகுபடி முறைகளிலும், குறிப்பாகத் தாய்மார்களும், குழந்தைகளும் சிறந்த பொழுது போக்காகக் கருதி, நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் ஈடுபட்டால் புத்தம் புதிய, சுவையான காய்களைப் பெற்று வளமான வாழ்வு வாழலாம்.

**எனவே,**

*நாட்டுக்கு நல்லசேவை*
*செய்திட*
*வீட்டுக்கு ஒரு தோட்டம்*
*அமைத்திடுவீர் !!*

**என்று 'தமிழரசு' இதழ் சார்பில் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.**



தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன் லால் சுகாதியா அவர்கள் 13-8-'76 அன்று செங்கற்பட்டு மாவட்டம் செய்யூரில், ஊரகப் பால்பெருக்குத் திட்டத்தைத் துவக்கி வைத்தார். பட்டதாரி இளைஞர் ஒருவருக்குப் பால்பண்ணை அமைப்பதற்கான கடனை ஆளுநர் அவர்கள் வழங்குவதை இப்படத்தில் காணலாம்.



# படமும் செய்தியும்



''வரதட்சணை ஒரு சமுதாயத் தீங்கு'' என்ற மாநிலக் கருத்தரங்கைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சென்னையில் 14-8-'76 அன்று துவக்கி வைத்து உரையாற்றினர். அவ்விழாவில், வரதட்சணை வாங்காமல் திருமணம் செய்து கொண்ட மாயவரத்தைச் சேர்ந்த திரு வி. எம். குமார் என்ற இளைஞருக்கு, ஆளுநர் அவர்கள் பரிசு வழங்கினர்.

தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கருங்கல் என்ற ஊரில் 18-8-'76 அன்று நடைபெற்ற விழாவில் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளை இலவசமாக வழங்கினர்.





வல்லரசுகளுடன் கூட்டுச் சேராமல் நடுநிலை வகிக்கும் நாடுகளின் மாநாடு ஸ்ரீலங்கா நாட்டின் தலைநகரான கொழும்பு நகரில் 16-8-1976 அன்று துவங்கியது. அம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் செல்லும் வழியில், 14-8-1976-ல், சென்னைக்கு வருகை தந்த பூடான் மன்னர் திரு. வான்சாக் அவர்களைத் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் வரவேற்று உபசரித்தார்.

கூட்டுச் சேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு செல்லும் வழியில் 14-8-1976 அன்று சென்னைக்கு வருகை தந்த சைப்ரஸ் நாட்டுத் தலைவர் திரு. மெக்காரியஸ் அவர்களைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார்.





கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரையை யொட்டியுள்ள இணயம் மீனவர் கிராமத்தில், கடல் அரிப்பினுல் சில வீடுகள் கடலில் மூழ்கின. அப்பகுதியைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 18-8-76 அன்று பார்வையிட்டார்.

கூட்டுச் சேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை செல்லும் வழியில் 14-8-1976 அன்று சென்னைக்கு வருகை தந்த லாவோஸ் நாட்டு மக்களுடைய ஜனநாயகக் குடியரசின் தலைவர் அவர்களைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் வரவேற்றுக் கலந்துரையாடினர்.







தேசிய ஈரான் எண்ணெய்க் கம்பெனியின் தலைவர் டாக்டர் மானுட்செர் எக்பால் அவர்களுக்கு சென்னைப் பல்கலைக்கழகம் 21-8-1976 அன்று கௌரவ டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேந்தரான தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், டாக்டர் மானுட்செர் எக்பால் அவர்களுக்குக் கௌரவப் பட்டம் அளித்துக் கை குலுக்கி மகிழ்வதைப் படத்தில் காணலாம்



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 20-8-'76-ல் திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பார்வையிட்டு, மக்களிடமிருந்து குறைகளைக் கேட்டு அறிந்ததுடன், மனுக்களையும் பெற்றுக் கொண்டார்.






தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தால் (டான்சி) புதிதாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள 'மோபெட்' மோட்டார் சைக்கிள்களின் விற்பனையை 23-8-1976 அன்று 'டான்சி' அலுவலகத்தின் முன்பு தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்தார்.

மத்திய அரசின் இராஜாங்க வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. பி. ஷிண்டே அவர்கள், சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள வேளாண்மை இல்லத்தில், 18-8-1976 அன்று நடைபெற்ற விழாவில் பாரத் புல்டோசர் ஒன்றை வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்களிடம் வழங்கி, அந்தப் புல்டோசரை இயக்கி வைத்தார்.









நமது பிரதமர் அவர்களின் இருபது அம்சத் திட்டத்தின், 7-வது அம்சத்தின் கீழ், துளையிடும் புதிய விசைக்கருவி ஒன்றை திரு. எ. பி. ஷிண்டே அவர்கள் கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள வேளாண்மை இல்லத்தில், 18-8-1976 அன்று இயக்கி வைத்தார்.

திருநெல்வேலி மாவட்டம் எட்டையாபுரம் பேரூராட்சியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டியை, 20-8-1976 அன்று, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார்.





# சோமங்கலம் ஊரக அபிவிருத்தித் திட்டப் பணிகளில் கால்நடை பராமரிப்புத் துறையின் பங்கு


**பா. சின்னதுரை**
கூடுதல் இயக்குநர்
கால்நடை வளர்ப்புத் துறை
தமிழ்நாடு அரசு


**செ**ங்கை மாவட்டத்தினைச் சார்ந்த சோமங்கலம் கிராமத்தில் ஊரக அபிவிருத்தித் திட்டம் 1976-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினைந்தாம் நாள் நமது பாரதப் பிரதமர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் செயலாக்கம் பெறும் பகுதியில் வாழும் ஒவ்வொரு குடும்பமும், குறைந்த பட்சம் 400 ரூபாய் மாத வருவாய் பெறத்தக்க வகையில் திட்டமிட்டுச் செயல்படுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். திட்ட அடிப்படையே குடும்ப வருவாயை அதிகரிக்கச் செய்வதாய் உள்ளதால், இப்பகுதியில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உருவாக்கப்படும்பொழுது, தற்போது இங்கு வாழும் மக்களின் குடும்ப வருவாய், அவர்களது தொழில், மூலதனவசதி, இப்பகுதியில் உற்பத்தி செய்யத் தகுந்த பயிர், ஆகியவை போன்ற உண்மைகள் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் இலட்சியக் குறிக்கோள் பலவாகும். அவற்றுள் கால்நடை வளர்ப்பு சம்பந்தப்பட்டவையில், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், மிகக் குறைந்த வருவாயினைக் கொண்ட விவசாயிகள், ஆகிய இனங்களைச் சார்ந்த 2,025 குடும்பங்களின் வருவாயை அதிகரிக்கச் செய்ய, பால் அபிவிருத்தி, கோழிவளர்ப்பு, ஆடு வளர்ப்பு ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பகுதியில் உள்ள தரக் குறைவான கால்நடைகளின் தரத்தைச் செயற்கை முறைக் கருத்தரிப்பு மூலம், உயரினமாக தரமுயர்த்தப்படும். தரமற்ற கால்நடைகளின் வளர்ச்சி தடுத்து நிறுத்தப்படும். காரணம், தரமற்ற கால்நடைகளால் மக்கள் அடையும் பயன் மிகக்குறைவு. இவ்வினக் காளை மாடுகள், இன விருத்திக்குப் பயன்படாத வகையில் ஆண்மை நீக்கம் செய்யப்படுகிறது. இவ்வினப் பசுக்கள் அதிக அளவு பால் தரக்கூடிய 'ஜெர்சி', 'பீரிசியன்' ஆகிய உயரினக் காளை விந்தினைக் கொண்டு செயற்கை முறையில் கருவூட்டப்படுகின்றன. இதன் மூலம் நான்காண்டுக் காலத்திற்குள் புதிய இனக் கால்நடைகள் மட்டுமே இப்பகுதியில் இருக்கும். மேலும் உருவாகி வரும். புதிய உயரினக் கால்நடைச் செல்வங்களை நோயற்றதாகக் காத்திட, இலவசமாக வைத்திய வசதியும் செய்து தரப்படுகின்றது. இக்கால்நடைகளிடமிருந்து அதிக அளவு பலன் கிடைக்க, நல்ல முறையில் இவற்றைப் பராமரிக்க, விவசாயிகளுக்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இப்பணிகளைச் செவ்வனே செய்து முடித்திட சோமங்கலத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று புதிதாகத் துவக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் காரணமாக, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறுவிவசாயிகள், ஆகியோரைக் கொண்ட குடும்பங்களின் மாத வருமானம் கூடுதலாகும்.

சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டத்தின் கீழ், தரமுள்ள எருமை ஒன்று வங்கியின் கடனுதவியுடன் தரப்படும். ஒழுங்காக பால் வழங்கி வரும் விவசாயிக்கு எட்டு மாதங்களுக்குப் பின் இரண்டாவது எருமையும், பதினாறு மாதங்களுக்குப் பின் மூன்றாவது எருமையும் வழங்கப்படும். கன்று ஈன்ற மூன்றாவது மாதத்தில், எருமைகளுக்கு ஒழுங்காகச் செயற்கை முறையில் கருவூட்டப்படும். பதினைந்து மாதங்களுக்குப் பின், இந்த உழவர்களிடம் எருமைகள் கறவையில் இருந்து வருமாததால், கடனில் வழங்கப்பட்ட எருமைகளுக்கான தொகையினைத் திருப்பித் தருவதில் சிரமம் ஏதும் இருக்காது. மூன்று ஆண்டுகளுக்குள், இக்கடன் தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தப் பட்டுவிடும். அதற்குப் பின்னர் 3 எருமைகளும் 3 கன்றுகளும் அவருக்குச் சொந்தமாகிவிடும்!

பால் விற்பனையில் சிரமமின்றிச் செயல்பட, தமிழ்நாடு பால் வள நிறுவனம் இப்பொறுப்பை ஏற்றுத்திறம்படச் செயல்படுத்தி வருகிறது. பாலிலுள்ள கொழுப்புச் சத்துக்குத் தகுந்தபடி விலை நிர்ணயிக்கப்படுகிறது.

ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்பினைத், தொழிலாகக் கொண்ட குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு 20 ஆடுகளும் ஒரு கிடாவும் வழங்கப்



படும். வழங்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும், ஆடுகள் ஈனும். அந்த ஆட்டுக் குட்டிகள் ஆறுமாத காலம் வளர்க்கப்பட்டுப் பின்னர் அவற்றில் 50 சதவீத கிடாக்கள் விற்கப்படும். இவ்விற்பனையின் மூலம் கிடைக்கும் தொகையில் பாதியினை, அவ்விவசாயி தனக்கு எடுத்துக் கொண்டு மீதியைக் கடனைத் திருப்பித்தர வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்விவசாயியிடம் உள்ள ஆடுகள் இரண்டு மடங்காக இருக்கும். இவ்வாறு வழங்கப்படும் ஆடுகளுக்கு ஒழுங்காகக் குடற்பூச்சி அகற்றுதல், நோய்த் தடுப்பு ஊசி போடுதல் ஆகிய பணிகளைக் கால்நடைப் பராமரிப்புத் துறை செய்து வரும். குடற்பூச்சி நீக்குவதினால் ஆடுகளில் ஏற்படும் சேதத்தைத் தவிர்ப்பதுடன், ஆட்டின் வளர்ச்சியை நன்கு அதிகரிக்கச் செய்ய முடிகிறது.

அடுத்து புழக்கடைக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீட்டிற்கும் 10 இளம் பெட்டைக் கோழிகளும், ஒரு சேவலும், என்ற விகிதத்தில் கோழிகள் வழங்கப்பட உள்ளன. தேவைப்படும் கோழிகள் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தினரால் வழங்கப்படும். இக் கோழிகளின் விலையில் 50 சதவீதம் சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் மானியமாக வழங்கப்படும். இப்பகுதியில் வாழும் மக்களிடையே உயர்ரகக் கோழிகளை வளர்க்கும் பழக்கம் இல்லை. ஆகவே, இந்நிலையை மாற்றிட வெள்ளை 'லெக்ஹார்ன்' போன்ற அதிக அளவு முட்டைகள் தரக்கூடிய உயர் இனக் கோழிகள் வழங்கப்படும். இம்முட்டைகளைத் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் பெற்றுக் கொண்டு முட்டையின் கிரயத்திற்குத் தீனி வழங்கும்.

மேலும், வாத்து வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 119 குடும்பங்கள் பயன் அடைய உள்ளன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாத்துகள் வழங்கப்படும். அறுவடைக் காலத்தில் இவ்வாத்துகளை மேய்ச்சலுக்காக வயல்களுக்குக் கொண்டு செல்லலாம். இதன் காரணமாகத் தீவனச் செலவு குறைந்து விடும். வாத்துகள் வாங்க சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்ட நிதியிலிருந்து மானியம் வழங்கப்படும். இவ் வாத்துகள் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு பருவத்திற்கு 50 முட்டைகள் இடும். எனவே, ஆறு மாதத்திற்கு 5,000 முட்டைகள் கிட்டும்!. ஒரு முட்டையின் விலை 30 காசுகள் எனக் கொண்டாலும், ஆறு மாதத்தில் 1,500- ரூபாய் கிடைக்கும். இத் திட்டத்தின் வாயிலாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், ஆகியோர் தங்கள் குடும்ப வருவாயினைப் பெருக்கிக் கொள்ள முடிகிறது.

இவைகளைத் தவிர வெள்ளாடு வளர்ப்பையும் ஊக்குவிக்க, வெள்ளாடுகள் வாங்கக் கடன் உதவி அளிக்கப்படும். வெள்ளாடுகளுக்குத் தீவனத்திற்கான மரங்கள் வளர்த்துப் பராமரிக்க, தனிப்பட்ட நிலங்களை ஒதுக்கீடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இப்போது சோமங்கலம் மற்றும் அதைச் சார்ந்த கிராமங்களில் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கால்நடைப் பராமரிப்புத் துறை பின்கண்ட அடிப்படைப் பணிகளைச் செய்து முடித்துள்ளது.

ஒவ்வொரு வீட்டிலும் வளர்க்கப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்பின் மூலம் ஒவ்வொரு குடும்பமும் பெற்று வரும் வருவாய் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு விட்டன. தீவனப் பயிர்கள் வளர்க்கக் கூடிய நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்புத் திட்டங்களின் மூலம் இப்பகுதி மக்களின் குடும்ப வருவாயைப் பெருக்க வழிமுறைகள் வகுக்கப்பட்டுவிட்டன.

கால்நடை நோய்த் தடுப்பிற்காகவும், கால்நடைகளை நன்முறையில் பராமரிக்கவும் கால்நடை மருந்தகம் ஒன்று 22-3-'76 அன்று சோமங்கலத்தில் திறக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அமையும் கிளை நிலையம் நடுவீரப்பட்டில் அல்லது எருமையூரில் அமைக்கப்பட உள்ளது. இவை தவிர நந்தம்பாக்கத்திலும் ஒரு கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பங்கு பெற்றுப்பலன் அடையும் மக்களையெல்லாம் நேரடியாகச் சந்தித்து, திட்டங்களின் நடைமுறை பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.

ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் 12-3-'76 அன்று பதிவு செய்யப்பட்டு, 15-3-'76 முதல் இயங்கி வருகிறது. இருபது ஆடுகளும் ஒரு கிடா ஆடும் வாங்குவதற்கு ரூ. 2,100- கடனை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர், கூடுதல் இயக்குநர் ஆகியோரும், பிற அலுவலரும் இப்பகுதிக்கு அடிக்கடி சென்று, திட்டம் வேகமாகச் செயல்பட எல்லாவித நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றனர். கால்நடை வளர்ப்பில் மக்களுக்கு நல்லறிவு ஊட்டும் கருத்துக்கள்

அடங்கிய விளம்பர போர்டுகள் கிராம மக்களின் நன்மைக்காக இப்பகுதி முழுவதும் நிறுவப் பட்டுள்ளன. கிராம மக்களை ஒவ் வொரு மாதமும், குறிப்பிட்ட நேரத்தில், அலுவலர்கள் நேரில் சந்தித்துத் திட்ட அபிவிருத்தி பற்றியும், பிற பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திட்டங்கள் மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகின்றன. மக்களது முழு ஆதரவும் திட்டப் பணிகளுக்கு இருந்திட்டால்தான் எதிர்பார்க்கப்படும் பலனைத் திட்டங்கள் தரும். இதனை உணர்ந்து, இப்பகுதி மக்கள், திட்டப்பணிகளில் ஆர்வமுடன் . ஈடுபட்டு உழைத்திடுதல் அவசியமாகும். அப்பொழுதுதான் அவர்கள் வாழ்வில் வளங்கொழிக்கும். நாட்டின் பொருளாதாரமும் மேம்படும். கிராம மக்கள் நல்வாழ்வு பெற்றிட—பொருளாதார வசதிகள் பெருகிட—சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் அகன்றிட—வேலையில்லாமையும் வறுமையும் நீங்கிட—நம் பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்துள்ள இருபது அம்சத் திட்டம் துணை செய்கிறது. ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் அது போன்ற பிற திட்டங்களை வெற்றிபெறச் செய்ய, கடுமையாக நாம் உழைத்திட வேண்டும். அப்பொழுதுதான் நம் பாரத அரசு எடுத்து வரும் முயற்சிகள், நல்ல முறையில் பலனளிக்கும். ஒவ்வொரு கிராமமும், தனது சுய தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்தினை தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். அவர்தம் கருத்தினை மனத்தில் கொண்டு, கடுமையாக உழைத்து நமது புதிய பொருளாதார திட்டம் வெற்றி பெறப் பாடுபடுவோமாக!



# தாழ்த்தப்பட்ட மலைச் சாதியினருக்கு சிறப்புப் பயிற்சி நிலையங்கள்!

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர்களுக்கென 1976-ஆம் ஆண்டில் 15 சிறப்புப் பயிற்சி நிலையங்களைத் துவக்குவதற்குத் தமிழ்நாடு அரசு ஆணை ஒன்றினைப் பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவால் 1976-ஆம் ஆண்டு அக்டோபரில் நடத்தப் பெறுகின்ற 'குரூப்' 4' தேர்வுக்குரிய பயிற்சியினை இந்தச் சிறப்புப் பயிற்சி நிலையங்கள் அளிக்கும். இவ்வகையில் ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் 60 விண்ணப்பதாரர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் தாழ்த்தப்பட்ட, மலைச்சாதி வகுப்பினர்கள் 40 பேர்களும் கிறித்துவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் 20 பேர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தமிழகத்தில் இந்த நிலையங்கள் சென்னை, செங்கற்பட்டு, திட்டக்குடி, தஞ்சாவூர், நிலக்கோட்டை, பரமக்குடி, சங்கரன்கோயில், ஆர்க்காடு, குளித்தலை, பெரம்பலூர், கிருஷ்ணகிரி, ஒண்டிப்புதூர், கூனூர் ஆகிய இடங்களில் துவக்கப்படுகின்றன. அனைத்துக்கல்வி நிலையங்கள் செயல்படுவது போன்று இவைகளும் செயல்படும். அரசின் எல்லா வேலைநாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரையில் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். பயிற்சிக் காலம் இரண்டு மாதங்களாகும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவால் வரையறுக்கப்பட்ட பாடத்திட்டங்களின் அடிப்படையில் பயிற்சியளிக்கப்படும். அதாவது, பொது அறிவு, கட்டுரை எழுதுதல், மொழி பெயர்ப்பு, சுருக்கி எழுதுதல், நேர்முகப் பேட்டி ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படும். தாழ்த்தப்பட்ட, மலைச்சாதி வகுப்பைச் சார்ந்த 'எஸ். எஸ். எல். சி.' தேறியவர்கள், 'பி.யு.சி.' தேறிய மற்றும் தேர்ச்சி பெறாதவர்களுக்கு மட்டும் இப்பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்படும். இப்பயிற்சிக்கு விண்ணப்பதாரர்கள், தாங்கள் எஸ். எஸ். எல். சி. யில் பெற்றுள்ள மதிப்பெண்களின் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாவட்ட அரிசன நல அலுவலரின் கலந்துரையின்பேரில் மாவட்டத் தலைமைக் கல்வி அலுவலர் இவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ரூ. 45 உதவித் தொகையும் பெறுவார். தங்குமிடம் இல்லாதவர்கள், விடுதிகளில் தங்கிப் பயிற்சிபெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித்தொகை, விடுதியின் உணவுத் தொகைக்குத் தேவையான அளவுக்கு ஈடு செய்யப்படுகின்றது.



# சென்னையில் அமுதம்!

மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில் மிக இன்றியமையாததாகத் திகழ்வது நுகர் பொருள்.

எப்பொருள் கிடைத்தாலும் இப்பொருள் கிடைப்பது சில சமயங்களில் அரிதாகி விடுகின்றது. சில சமயம் இதன் விலை ஏறும்; சில சமயம் திடீரென இறங்கும். பதுக்கல் என்னும் அரக்கன் பிடியில் சிக்கித் தவிக்கும்பொழுது இதன் விலைகள் விஷம் போல் ஏறுவதை நாம் பார்க்கலாம். அரசின் 'தக்க நடவடிக்கை' என்னும் சிகிச்சை மூலமே இந்தக் கொடிய விஷத்தை இறக்க முடிகின்றது.

மக்களின் உயிர்ப் பிரச்சினைகளுக்குத் தடையாக இருக்கும் தரமில்லா நுகர் பொருட்களுக்கெல்லாம் தடைவிதித்துக் குறைந்த விலையில் தரமான நுகர் பொருள்களை ஒரே இடத்தில் மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்கத்தோடு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் 'அமுதம்' என்ற பெயரில் சிறப்பு அங்காடிகளைத் ( Departmental Stores ) துவக்கி இருக்கின்றது.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் சில்லறை அங்காடிகள் ஏற்கெனவே சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உணவு தானியங்கள், பயறு வகைகள் மிளகாய், சோப்பு, குழந்தை உணவுப் பொருள், வனஸ்பதி, எண்ணெய் வகைகள் போன்ற, உணவுப் பங்கீட்டு முறையில் அடங்காத பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன.

நாட்டில் அவசரச் சட்டம் அறிவிக்கப் பெற்றதன் விளைவாலும், தமிழகத்தில் ஜனதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டதன் பயனாலும் பலசரக்கு மற்றும் இதர நுகர்பொருள்களின் விலைகள் சாதாரணமாகவே இருந்து வந்தன. ஆனால் அண்மையில் சில சமூக விரோத சக்திகளும், கள்ள வணிகர்களும் இன்றியமையாத பொருட்கள் சிலவற்றைப் பதுக்கி வைக்க முற்பட்டனர். இதன் காரணமாக அத்தகைய பொருட்களின் விலைகளும் உயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பொதுச் சந்தையில் இன்றியமையாத நுகர் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்திடும் முறையிலும், பிரதமர் அவர்களின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் முதல் அம்சமான 'இன்றியமையாப்பொருட்களின் விலைகளைக் குறைத்தல்; அவைகளைச் சீராக விநியோகம் செய்தல்' முறையினைச் சீராகச் செயல்படுத்திடும் வகையிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் சிறப்பு அங்காடிகளைத் தொடங்க ஆரம்பித்தது.

'அமுதம்' என்னும் பெயரினைத் தாங்கியுள்ள இத்தகைய அங்காடிகள் தற்பொழுது சென்னை மாநகரில் கீழ்க்காணும் 7 இடங்களில் தொடங்கப்பட்டு அவை



சீரான முறையில் செயல்பட்டு வருகின்றன. அவை:

1. எண். 75, ஹாரிங்டன் சாலை சேத்துப்பட்டு.

2. பூந்தமல்லி நெடுஞ்சாலை-பிளவர்ஸ் சாலை சந்திப்பு, கீழ்ப்பாக்கம்.

3. எண் 24-ஏ, சாமியர்ஸ் சாலை, நந்தனம்.

4. அசோக் நகர் வீட்டுவசதி வாரிய விற்பனை நிலையக் கட்டடம், அசோக்நகர்.

5. எம். பி. டி. குடியிருப்பு, தண்டையார்ப்பேட்டை.

6. தங்கச்சாலை உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்குக் கட்டடம். (பேருந்து நிலையம் அருகில்), தங்கசாலை.

7. அண்ணா நகர் உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்குக் கட்டடம். அண்ணாநகர்.

ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இன்னும் பல அங்காடிகளை விரைவில் துவக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகு அங்காடிகளைத் திறப்பதன் முக்கிய நோக்கம், சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் குறைந்த விலையில்-ஒரே இடத்தில் பெறச் செய்வதேயாகும். இலாபம் தேடும் குறிக்கோள் இன்றியும், பொது மக்களுக்கு உதவிட வேண்டும் என்கின்ற நல்லெண்ணத்துடனும் தான் இந்த அங்காடிகள் தொடங்கப்பெற்றுள்ளன.

சில பொருட்களின் விலைகள், அதன் தயாரிப்பாளர்கள் நிர்ணயித்த விலைகளைக் காட்டிலும் குறைவாகவே மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இது, பொதுச் சந்தையில் விற்பனையாகும் பொருட்களின் விலைகள் குறைவதற்கு வழிகோலுகிறது; 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் முகப்பாகவும் அமைகிறது.

பொதுவாக 'அமுதம்' சிறப்பங்காடியில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களின் விலையை — குறிப்பாகத் தேயிலை, காப்பித்தூள், காப்பிக்கொட்டை, பலசரக்குப் பொருட்கள் போன்றவற்றின் விலையை நகரிலுள்ள ஏனைய கூட்டுறவுச் சங்க அங்காடிகள், சிறப்பு அங்காடிகள், முன்னணியில் நிற்கின்ற தனியார் அங்காடிகள் போன்றவற்றின் விலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அமுதம் சிறப்பங்காடியில் மிகவும் குறைவான விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

இந்த அங்காடிகளில் ஏறத்தாழ 300 வகையான நுகர் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவைகளில் பலசரக்குப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், பற்பசை பல்துலக்கும் 'பிரஷ்' (Tooth Brush) குழந்தை உணவு மற்றும் சத்து உணவுப்பொருட்கள் சோப்புகள் போன்றவைகள் அடங்குகின்றன.

நெசவுத் தொழில் நிறுவனத்தினுடைய (N. T. C.) துணிகள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. தவிர, தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனமும் தனது விற்பனை நிலையத்தை இங்கே அமைத்து முட்டைகள், சிறகு, தோல் நீக்கப் பெற்ற கோழிகள் போன்றவைகளையும் நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றது. இவைகளின் விற்பனை நிலையங்கள் விற்பனையில் 'கமிஷன்' அளித்திடும் ஒப்பந்தத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு பால்வள நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் மேற்



மேலும் புதுவகைப் பொருட்களின் தேவை எழுகின்ற நேரத்தில் அத்தகைய பொருட்களையும் வாங்கி, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும். இதற்கெனப் புதிய இருப்புக்களும், உடனுக்குடன் நிரப்பி வைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நுகர் பொருட்களை மட்டும் விநியோகித்தால் போதாது; ஏழை, எளியவர்கள், நடுத்தர மக்கள் ஆகியோர் பயன்பெறுகின்ற வகையில், கட்டுப்பாட்டு விலையிலும், நியாயமான விலையிலும் துணிகளையும் விநியோகித்திட வேண்டும். எனவேதான் தேசிய

கொள்ளப்பெற்று, அதன் தயாரிப்புகளான நெய், வெண்ணெய் போன்றவைகளை விற்பனை செய்திடவும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

நுகர்வோரின் வசதியைக் கருத்திற்கொண்டு, இந்த அங்காடிகளின் அருகில் திறந்தவெளி இடம் கிடைத்தால் இங்கே சிற்றுண்டி, மற்றும் குளிர் பானங்கள் போன்றவைகளையும் வழங்கிடும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பலசரக்குப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள்,

சோப்புகள் போன்ற பல்வேறு நுகர்பொருட்களை, முடிந்த அளவிற்கு மிகவும் குறைந்த விலையில் பெற்று, பொதுமக்கள் பெரும் பயன் பெற்றிடும் அளவிற்கு அவைகளை விற்பனை செய்து வருவதும் சிறப்பான அம்சமாகும். குழந்தையுணவு மற்றும் சத்துணவுப் பொருட்களையும் தட்டுப்பாடின்றி, போதிய இருப்பில் வைத்து அவைகளைச் சீரான முறையில் விநியோகமும் செய்கின்றன.

பொது மக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு சென்னை நகரில் மட்டுமல்லாமல் சில மாவட்டங்களின் தலைநகர்களிலும் இத்தகைய அங்காடிகளைத் துவக்கிடும் திட்டத்தினையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.



பொதுமக்கள் பெரிதும் பயன் பெற்றிடும் விதத்திலும், சமுதாயத்திலுள்ள அனைத்து மக்களின் வாங்கும் சக்திக்கேற்ற வகையில் குறைந்த விலையில் நுகர்பொருள்களை விற்பனை செய்திடும் முறையிலும், தரமான பொருட்களைத் தட்டுப்பாடின்றி, சீராக விநியோகம் செய்வதிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 'அமுதம்' சிறப்பங்காடி முனைப்பாகச் செயலாற்றுகிறதென்றால் அது மிகையாகாது!

—ஆயிரராமன்



# "சொந்தக்காலில் நிற்போம்!"

"இங்கு இருபதம்சத் திட்டம் செயல்வடிவம் பெற்றிருப்பதைப் பார்த்தேன். உழைத்துப் பிழைக்கின்றவர்களுக்கு நிலப் பட்டா, உழவுக் கருவிகள் முதலானவை வழங்கப்பட்டுள்ளன. ஏழை எளியவர்களுக்கு, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் உதவி செய்து வருவதன் மூலம் அன்றைய கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது. இந்தப் பகுதி மக்கள் சொந்தக் காலில் நிற்பார்கள் என நினைக்கிறேன்.''

இவ்வாறு மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர் திரு. ஓம் மேத்தா அவர்கள், செங்கற்பட்டு மாவட்டம் நந்திவரம்-கூடுவாஞ்சேரி ஊராட்சி சார்பில் 1976 ஜூலைத் திங்கள் 25-ஆம் நாள் நடைபெற்ற இருபது அம்சத் திட்ட ஓராண்டு நிறைவு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

முதலில் நந்திவரம் பயணிகள் விடுதியில் தென்னங்கன்று, சப்போட்டா, மாங்கன்று ஆகியவைகளை மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர் திரு. ஓம் மேத்தா அவர்கள் நட்டார். பிறகு பல்வேறு துறைகள் பங்கேற்ற கண்காட்சியைத் துவக்கி வைத்தார்.

சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தாம்பரம் ஸ்டேட் வங்கி கடன் வழங்கியதன் மூலம் பெறப்பட்ட 28 பால்மாடுகள், 21 ஆடுகள், 10 தழை மிதிக்கும் கருவிகள், 30 கலப்பைகள் மற்றும் விசைத் தெளிப்பான்கள் ஆகியவற்றை மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நந்திவரம், கூடுவாஞ்சேரியில் இரண்டு பள்ளிக் கட்டடத்திற்கான அடிக்கல்லையும் அமைச்சர் நாட்டினார்.

இவையன்றிக் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கூடுவாஞ்சேரி ஊராட்சி, வில்லியம்பாக்கம் ஊராட்சி, சிங்கப்பெருமாள் கோயில் ஊராட்சி ஆகியவற்றிற்குத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் அமைச்சர் வழங்கினார்.

பள்ளி மாணவர்க்கான 'சஞ்சாயகா' சிறுசேமிப்புத் திட்டத்தில் இப்பகுதியைச் சேர்ந்த 1,037 மாணவர்கள் கணக்கு வைத்துள்ளனர். அவர்களுக்குப் பாஸ் புத்தகங்களை அமைச்சர் வழங்கினார்.

இவை மட்டுமா?

101 பேர்களுக்கு மனைப் பட்டாக்கள், புத்தக வங்கிகள் மூலம் மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள், மலிவு விலையில் தரமான துணிகள், அரிசன நலத்துறை மூலம் தையல் இயந்திரங்கள், சவரத் தொழில் கருவிகள், 138 பேருக்கு நிலப் பட்டா, உடல் ஊனமுற்றோர்களுக்கு 5 மூன்று சக்கர வண்டிகள், இறந்த அரசு ஊழியர் குடும்பத்துக்கு ரூ. 10 ஆயிரம் ஆகியவற்றையும் அமைச்சர் வழங்கினார்.

—பி. வி. ஜி.




TNSCB : 112

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் "சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்."

## மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் "சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்" அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 23 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொரு நபருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்பு கணக்கில் வரவுவைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

TNSC BANK

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600001.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள் சேமிப்பை அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.



# சேலம் மாவட்டத்தில் தேனீ வளர்ப்புத் திட்டம்

**சே**லம் மாவட்டத்தில் 1958-ம் வருடம் முதல் தேனீ வளர்ப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

இந்த மாவட்டத்தில் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரிய நிர்வாகத்தின் கீழ் 21 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஏர்க்காடு மற்றும் கொல்லிமலைப் பகுதிகளிலும் 8 தேனீ வளர்ப்பு உபகிளைகளும், டேனிஷ்பேட்டையில் ஒரு மாதிரி தேனீ வளர்ப்பு நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

598 கிராமங்களில் 2,939 பேர் தேனீ வளர்ப்புத்தொழிலைச் செய்து வருகின்றனர். இதன் மூலம் சென்ற ஆண்டு (75-76) சுமார் 33,610 கிலோ தேனும், 304 கிலோ மெழுகும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தேனீ வளர்ப்போர்களால் உற்பத்தி செய்யப்படும் தேன், ஏர்க்காடு தேனீ வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமும், கொல்லி மலை தேனீ வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமும் கொள்முதல் செய்யப்படுகிறது.

தேனீ வளர்ப்புத் தொழிலை அபிவிருத்தி செய்ய, தேனீ வளர்ப்போர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்குக் கடன் மற்றும் மான்யம் வழங்கப்படுகிறது. தேனீ வளர்ப்புத் தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு வருடந்தோறும் கோடைக்காலப் பயிற்சி ஒன்று நடத்தப்படுகிறது. 1975'-76-ம் ஆண்டு முடிய 10,964 தேனீப் பெட்டிகள் மான்ய விலையில் (50 சதவீதம் விலை) தேனீ வளர்ப்போர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தற்சமயம் தேனீ வளர்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளில் குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சேர்வராயன் மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்குத் தேனீ வளர்ப்புத் தொழிலை அபிவிருத்தி செய்ய நபர் 1-க்கு ரூ. 1,500 வீதம் 20 மலைவாழ் மக்களுக்கு சேலம் யுனைடெட் கமர்ஷியல் பாங்கு கடன் வழங்கி உதவியுள்ளது.

ஏர்க்காடு பகுதியில் கிடைக்கும் தேனைப் பக்குவப்படுத்தி, வெளி இடங்களுக்கு அனுப்புவதற்குத் தேவையான இட வசதியை ஏற்படுத்த (Construction of a Honey House) தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் ரூ. 25,000 கடனைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கியுள்ளது. இத்திட்டத்தினால், அதிக உழைப்போ, சிரமமோ சிக்கலான தொழில் நுட்பமோ தேவையின்றி, மலைவாழ் மக்கள் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்ள உதவுவதால் மலைவாழ் மக்களிடையே, சிறப்பாக பெண்களிடையே இத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

## நாம் சிந்திக்க வேண்டியது என்ன?

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மிகச் சிறந்த முறையில் இயங்கி வந்த இந்த உலகம் தற்போது அச்சுறுத்தப்படுகிறது. ஏனெனில் ஒவ்வொரு மனிதரும் தாம் எதைப் பெறலாம் என்ற கேள்வியை எழுப்புகிறார்கள். இந்த வழக்கம் நம் நாட்டிலும் உள்ளதைப் பார்க்கிறோம். "அரசிடமிருந்து நாம் எதைப் பெறமுடியும்? ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை நமக்குச் சாதகமாக்கிக் கொள்வது எப்படி?" நாடு நமக்காக என்ன செய்கிறது என்ற கேள்விக்குப் பதிலாக நாட்டிற்கு நாம் என்ன செய்ய முடியும் என்பது பற்றி யோசிக்க வேண்டிய நேரம் வந்துள்ளது. திறமை, சேவை, அறிவுத் திறன் ஆகிய வடிவங்களில் நமது சமுதாயத்திற்குத் தொண்டாற்றுவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

—இந்திரா காந்தி.

# சுயவேலைத் திட்டம் உருவாக்குவோம்!

“கிராமப்புறப் பால் வளப் பெருக்கும் திட்டம் மூலம் கால் நடைகளைப் பெருக்குதல், காத்தல், பாலை விற்பனை செய்தல் போன்ற பணிகளைத் தமிழ்நாடு பால்வள நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 53 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட 15 கிராமங்களின் மக்கள் பயன் அடைவர்.

இவ்வாறு தமிழக ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்கள், ஆகஸ்டு 13-ஆம் நாள் செய்யூரில் நடந்த கிராமப்புறப் பால்வளம் பெருக்கும் திட்ட விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.



செய்யூர் வட்டக் கிராமப் பகுதிகளில் ஆளுநர் அவர்கள் கறவை மாடுகளைப் பார்வையிடுகிறார்.

தமிழ்நாடு பால்வள நிறுவனம், மதுராந்தகம் வட்டத்திலுள்ள செய்யூரில் கிராமப்புற பால்வளம் பெருக்கும் திட்டத்தை அமைத்துள்ளது. இதன் மூலம் சோத்துப்பாக்கம், மழுவங்கரணை, சித்தாமூர், பொலம்பாக்கம், சரவம்பாக்கம், கோட்டிவாக்கம், காட்டுதேவாதூர், வெண்மணி முதலான கிராமங்கள் பயனடைகின்றன.



கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட திரு. நடேசன் என்பவருக்கு ஆளுநர் அவர்கள் கறவை மாடு வழங்குகிறார்.

மேற்கண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஆளுநர் அவர்கள் சென்று கிராம மக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார். இந்தக் கிராமங்களில் உள்ள கறவை மாடுகளையும் அவர் பார்வையிட்டார்.

காட்டுதேவாதூரிலுள்ள அரிசனக் குடியிருப்புக்கு ஆளுநர் அவர்கள் திறந்த ஜீப் காரில் சென்று, அரிசன பால் பண்ணை விவசாயிகள் பால் திரட்டும் முறை, சோதனை நடத்தும் முறைகளைப் பார்வையிட்டார்.

செய்யூரில் பால்வள நிறுவனமும், கால்நடைப் பராமரிப்புத் துறையும் அமைத்திருந்த கண்காட்சியையும் ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார்.

செய்யூரில் நடந்த கிராமப் புறப் பால்வளம் பெருக்கும் திட்ட விழாவில், ஆளுநர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

''தமிழ்நாடு பால்வள நிறுவனம் கால்நடைகளை 2 மடங்கு உயர்த்தியும், விற்பனையை 3 மடங்கு உயர்த்தியும் உள்ளது. கால்நடைகளை நோய்களிலிருந்து தடுப்பதில் தீவிரம் காட்ட வேண்டும். கால்நடை மருத்துவ அதிகாரிகள் இதில் தக்க கவனம் உரிய காலத்தில் செலுத்த வேண்டும்.

''வேலை இல்லாமல் திண்டாடும் 20 பட்டதாரிகளுக்கு மாடுகள் வாங்க 30 ஆயிரம் ரூபாயை சென்ட்ரல் வங்கி கொடுத்துள்ளது. கனரா வங்கி 600 பேருக்குக் கறவை மாடுகள் வாங்க 16 இலட்ச ரூபாய் கொடுத்துள்ளது.

''இன உற்பத்திக்காகச் செயற்கைக் கருமுறை செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்கள். இந்த உற்பத்தி முறையைக் கால்நடை வைத்திருப்பவர்களுக்கு உரிய காலத்தில் செய்துகொடுக்க வேண்டும். மாடுகள் வளர்ப்போர் தீவனம் கொடுப்பதிலும் தக்க கவனம் செலுத்த வேண்டும். நல்ல சத்துணவு கொடுத்தால் தான் மாடுகள் அதிகப் பால் கொடுக்கும்.

''கிராமப்புறங்களில் மக்களுக்குச் சுயவேலைத் திட்டங்களை உருவாக்க வேண்டும். மனித உழைப்பைப் பயன்படுத்தும் வகையில் இது இருக்க வேண்டும்.''

பிறகு, அரிசனங்கள், நிலமற்ற உழைப்பாளர்கள், மிகச் சிறிய விவசாயிகளுக்குக் கறவை மாடுகளையும், சிறு விவசாயிகள் திட்ட மானிய உதவியையும், மீட்கப்பட்ட கொத்தடிமைகள் 12 பேர்களுக்குப் பசுமாடுகளையும்ஆளுநர் அவர்கள் வழங்கினர்.

திரு. ஆர். சுப்பிரமணியம் என்பவரின் மாடு ஒன்று 'இன்சூர்' செய்த மறுநாளே இறந்து விட்டது. கனரா வங்கி இன்சூரன்சு திட்டத்தின்கீழ் அவருக்குக் கொடுத்த 1,300 ரூபாயையும், வேலையற்ற பட்டதாரி இளைஞர்களுக்குப் பால்பண்ணை அமைக்கக் கடனுதவியையும் ஆளுநர் அவர்கள் வழங்கினர்.

இவையன்றி, சிறந்த எருமை மாடு வைத்திருக்கும் திருமதி பாப்பம்மாள் என்பவருக்கும், கறவை மாடுகள் போட்டியில் வெற்றி பெற்ற திரு. முகமது அலி என்பவருக்கும் விழாவில் பரிசுகள் வழங்கப் பெற்றன.

செய்யூரில் நடந்த இந்த விழா. இருபதம்சத் திட்டம் செயல் வடிவம் பெறும் விழாவாக அமைந்தது என்றால் அது மிகையல்ல.

—பி.வி.ஜி.

# தொழுநோய் குழந்தைகளையும் விடவில்லை!

**செ**ங்கற்பட்டு நகரில் உள்ள 'லியோ' கிளப்பைச் சேர்ந்த இளம் டாக்டர்கள் அடங்கிய ஒரு குழு சமீபத்தில் அகரம் கிராமத்தில் ஓர் ஆய்வை நடத்தியது. அந்தக் கிராமத்தில் தொழுநோய் (குஷ்டநோய்) தொற்றிய நிலை 24 சதவிகிதம் குழந்தைகளிடையே இருப்பதை அந்த ஆய்வு கண்டு பிடித்தது. தொழுநோய் தொற்றிய நிலை குழந்தைகளிடையே இவ்வளவு அதிகமான அளவில் காணப்படுவது அசாதாரணம் என்று கருதப்படுகிறது.

தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக இத்தனை ஆண்டுகளாகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் தொழுநோய் தொற்றிய நிலை 4 சதவிகிதம் குழந்தைகளிடையே இருப்பது அசாதாரணமானது என்று கருதப்படுகிறது.

டாக்டர்கள் குழு அந்தக் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று மிகவும் கவனமாக ஆய்வு நடத்தியது. குழந்தைகளிடையே தொழுநோய் தொற்றிப் பரவுவதற்கான வாய்ப்பு அதிகம். தொழுநோய் தொற்றிய குழந்தைகள் மூலமாக மேலும் பிற குழந்தைகளுக்கும் அந்த நோய் பரவும்.

தொழுநோய் தொற்றியவர்களுக்கு 'டி.டி.எஸ்.' மாத்திரைகளைத் தரலாம். இது உடனடியாகக் கிடைக்கக்கூடியது. நோய் தொற்றியவுடன் இதனை அளிக்க ஆரம்பித்தால் பலன் ஏற்படும். இதன் விலையும் மலிவு 10 கிராம் மாத்திரைகள் ஆயிரம் ரூ. 10-க்கு வாங்கலாம். 25 கிராம் மாத்திரைகள் ஆயிரம் ரூ. 25-க்கு வாங்கலாம். இந்த மாத்திரைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குக் கொடுக்க வேண்டியிருக்கும். சம்பந்தப்பட்ட நோயாளியின் நிலையையொட்டி இதை எவ்வளவு காலத்திற்குக் கொடுப்பது என்பதை முடிவு செய்ய வேண்டும்.

லியோ கிளப் டாக்டர்கள் கால விரயம் செய்யாமல் பழைய செய்தித்தாள்களை நன்கொடையாக வசூலித்து அவற்றை விற்றுக் கிடைத்த பணத்தைக் கொண்டு 'டி. டி. எஸ்.' மாத்திரைகளை வாங்கினர். அகரம் கிராமத்துக் குழந்தைகள், ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பம்பாயில் தொழுநோய் சிகிச்சைக்கு ஊசி மூலம் செலுத்த ஒரு மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. லியோ கிளப் டாக்டர்கள் இதனையும் கேட்டிருக்கிறார்கள். 'டி.ஏ.டி.டி.எஸ். இன்ஜெக்ஷன்' என்று இதற்குப் பெயர். இதை ஒரு நோயாளிக்கு ஒருமுறை ஒரு 'இன்ஜெக்ஷன்' வீதம் தர வேண்டும். நான்கு முறை கொடுத்ததும் முழுக் குணமேற்படும் என்று சொல்லப்படுகிறது.

இந்த 'இன்ஜெக்ஷனின்' விலை அதிகமாக இருக்கக் கூடும். ஆனால், நிவாரணம் நிச்சயம் என்பதால் இதனைப் பயன்படுத்தலாம்.

திருமணியில் உள்ள மத்திய தொழுநோய் பயிற்று மற்றும் ஆராய்ச்சிக் கழகம் இந்த 'இன்ஜெக்ஷனை' முயற்சிக்கத் தொடங்கியுள்ளது.

அகரம் குழந்தைகளின் உணவு முறை பற்றியும் 'லியோ' டாக்டர்கள் ஆய்வு நடத்தினர். அகரம் கிராம குழந்தைகளுக்குப் பொதுவாக 'ஏ' வைட்டமின் சத்து, குறைவாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


காதி கிராப்ட்
ஏராளமான சத்து
என்னிடம் உண்டு
தாராளமாய்
என்னைப் பயன்
படுத்துவீர் – ''பனை''
இனிமைக்குப் பனஞ்சீனி,
பனை வெல்லம், பனங்கற்
கண்டு, சாக்லெட்கள்,
ஜாம், பழரசங்கள்.
குளிர்ச்சிக்குப் பதநீர்,
பாம்ஒ குளிர்பானங்கள்
எழிலுக்குப் பனை ஓலைப்
பொருட்கள்.
பதநீர்
JAM
துப்புரவிற்குப் பனம்
தும்பு பிரஷ்கள். தரமான
மலிவான, இவை
வாங்கிடத் தமிழக
மெங்கும் 180 காதி
கிராப்ட்.
காதி கிராப்ட்
தமிழ்நாடு கதர்,
கிராமத் தொழில்வாரியம்,
'குறளகம்',
எஸ்ப்ளனேடு,
சென்னை - 600 001
KK/380 TAM



அட்டைப்படக் கட்டுரை

# நாதியற்றுக்கிடந்த 24,000 பேர்களுக்கு நல்வாழ்வு பிறந்தது!

கொடுத்த கடனைத் திருப்பித் தரவில்லை என்பதற்காக, கடன் வாங்கியவர்களின் குடும்பப் பெண்களை இழுத்துச் சென்று—கடனைத் திருப்பித்தரும் வரையில் கடன் கொடுத்தோர் தங்களுடன் வைத்திருந்துள்ளனர்!

அதுமட்டுமல்ல!

கடனைத் திருப்பித் தரவில்லை என்பதற்காகக் கணவனின் முன்னாலேயே மனைவியின் கற்பைச் சூறையாடியுள்ளனர்.! தகப்பன் முன்னாலேயே மகளை மானபங்கம் செய்துள்ளனர்! பயத்தின் காரணமாகக் கணவனோ அல்லது தகப்பனோ இக்கொடுமையைத் தடுப்பதும் இல்லை.

நினைத்தாலே நெஞ்சம் பதறும் இத்தகைய கொடுமைகள் தென்னார்க்காடு மாவட்டம், கல்ராயன் மலைப்பகுதியில் 14-4-1976-க்கு முன்னால் நடைபெற்று வந்துள்ளன!

உங்களால் நம்ப முடியவில்லை அல்லவா?

ஆனால் கல்ராயன் மலைப்பகுதியில் வாழும் பழங்குடி மக்கள், காலங்காலமாகத் தாங்கள் அனுபவித்த இன்னல்களைக் கூறக் கேட்ட யாரும் நம்பாமல் இருக்க முடியாது!

வெளி உலகத் தொடர்பு அற்றிருந்த அவர்களுக்கு, நமது நாட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி எதுவுமே தெரியாது!

மனித வாழ்வுக்கு இன்றியமையாது தேவைப்படும் அடிப்படை வசதிகளான குடிநீர், பள்ளிகள், மருத்துவ வசதிகள், சாலைகள் ஆகியவை இல்லாமல் அவர்கள் இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர்கள்!

## அறியாமை என்னும் இருள் அகலுகிறது!

தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள கல்ராயன் மலைப்பகுதி ஏறத்தாழ 40 கி. மீட்டர் நீளத்திற்கும், 20 கி.மீ. அகலத்திற்கும் பரந்துள்ள ஒரு மலைப்பகுதியாகும். இம் மலைத் தொடர் 600 மீட்டர் முதல் 900 மீட்டர் வரை உயர்ந்துள்ளது. குறும்பக் கவுண்டன், சடையக் கவுண்டன், அரியக் கவுண்டன் என்றழைக்கப்படுகிற முன்னாள் ஜாகீர்ப்பகுதிகள் மூன்று இம்மலைப்பகுதியில் அடங்கியுள்ளன. இப்பகுதியில் 103 கிராமங்கள் உள்ளன. இங்கு வாழும் மக்கள் தொகை சுமார் 24,000 ஆகும். அவர்களில் பெரும்பாலோர் 'மலையாளிகள்' (மலைவாசிகள்) என்று அழைக்கப்படும் பழங்குடிகளாவர். இப்பகுதியிலுள்ள பழங்குடி மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். அறியாமை இருளிலும், ஏழ்மையிலும் அவர்கள் மூழ்கியுள்ளனர். பல்வேறு வகைகளில் அவர்கள் வெளியாரின் சுரண்டலுக்கும், ஆதிக்கத்துக்கும் ஆளாகியுள்ளனர்.

அறியாமை என்னும் இருளில் மூழ்கியிருந்த அம்மக்களுக்கு, நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் கொண்டு வரப்பட்ட இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் என்னும் ஒளிவிளக்கின் வெளிச்சம் 14-4-'76 அன்றுதான் முதன் முதலாகத் தெரிந்தது! ஆம்! தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பத்மநாபன் அவர்கள் 14-4-1976 அன்று இருபது அம்சத் திட்டம் என்னும் ஒளிவிளக்கை எடுத்துச் சென்று, கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்களிடையே 'இருபது அம்சத் திட்டத்தின் பயன்' என்னும் ஒளியைப் பரப்பிய பின்புதான், அவர்களிடையே சூழ்ந்திருந்த அறியாமை என்னும் இருள் கொஞ்சம் கொஞ்சமாக அகல ஆரம்பித்துள்ளது!

**அரசின் முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை!**

மாவட்டத்தின் பிற பகுதிகள் வளர்ச்சியடைந்தபோது இப்பகுதி மட்டும் தனித்துநின்றதால் இந்நிலை நேர்ந்தது. தமிழ்நாடு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (சட்டம் எண். 26/1963) விதித்துறைகளைச் செயல்படுத்தி, இந்தப் பகுதியில் ரயத்து வாரி நிலவரி ஏற்பாட்டைக் கொண்டுவர அரசு முயற்சி செய்தது. ஆனல் இந்த முயற்சியில் அரசு வெற்றிபெற முடியவில்லை. ஏனென்றல், இப்பகுதியின் ஜாகீர்தார்கள் 'ரிட்' மனுக்களையும், உரிமை வழக்குகளையும் இடைவிடாமல் தொடுத்து, நீதி மன்றங்களிடமிருந்து தடை ஆணைகளைப் பெற்றுவந்தனர். எனவே, இப்பகுதியில் ஊராட்சிகளையோ, வளர்ச்சி வட்டாரங்களையோ அரசால் நிறுவ முடியவில்லை. இதன் விளைவாக, சுமார் 500 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள பகுதி முழுவதும் எந்த வளர்ச்சியும் அடையாமல் பின்தங்கிய நிலையில் இருந்து வந்தது. இப்பகுதி முழுவதும் நிலஅளவை செய்யப்படாமலும் உள்ளது.

**வளமும் வனப்பும் நிறைந்துள்ளன!**

தொலைவிலிருந்து பார்த்தால் கல்ராயன்மலைத்தொடர்மேற்குப் புறத்திலிருந்து பிற பகுதிகளைக் காணவொட்டாது தடுக்கின்ற ஒரு பெரிய சுவர்போல் தோற்றமளிக்கிறது. இம்மலைத் தொடரின் தெற்கு முனையில் சேலத்திற்குச் செல்கிற ஆத்தூர் கணவாய் அமைந்துள்ளது. தென்மேற்குப் பருவ மழையின் போது இக்கணவாய் மூலமாகக் குளிர்



ஒளிமயமான எதிர்காலம் உருவாகுமா என்று ஏங்கும் கல்ராயன் மலைவாழ் பழங்குடிமக்களில் ஒரு பகுதி.

காற்று வீசுகின்றது. அரிப்புக் காரணமாக இம்மலைத் தொடர்களிலுள்ள பள்ளத்தாக்குகள் வடிநிலப் பள்ளத்தாக்குகளாக மாறியுள்ளன. இம்மலைத் தொடர்கள் பொதுவாக கிழக்குப் புறமாகச் சரிந்துள்ளன. அந்தத் திசையில் முக்கிய ஆறுகள் பாய்கின்றன. மணிமுத்தா நதி, கோமுகி நதி, மயூர நதி, ஆகிய நதிகள் இங்கு பாயும் முக்கிய நதிகளாகும். இந்த நதிப் பள்ளத்தாக்குகள் குறிப்பாக தும்பா பள்ளத்தாக்கு (இதற்குக் கீழ்ப்புறமாக மணிமுக்தா நதி பாய்கின்றது)-ஆழமான பிளவுகளைக் கொண்டுள்ளது. இவற்றின் பக்கங்கள் மிகச் செங்குத்தாக உள்ளன. இப்பகுதியின் சராசரி 30 அங்குலம் முதல் 35 அங்குலம் வரை மழைபெய்கின்றது. இப்பகுதியின் மண் வளம் தோட்டப் பயிருக்கு உகந்ததாகும். இப்பகுதியிலுள்ள பழங்குடி மக்கள் வேளாண்மையைப் பொறுத்த வரையில், மிகப் பழங்கால முறைகளையே பின்பற்றி வருகின்றனர். சந்தன மரம், மூங்கில், பலாமரம், மிலாறு (Wattle) மாசிக்காய், புளிய மரம் ஆகியவை இங்கு பொதுவாக வளரும் மரவகைகளாகும்.

'லன்டானு (Lantana) என்னும் ஒருவகை புதர்ச்செடி கல்லும் தரிசுமாகவுள்ள இந்நிலத்தில் எங்கு பார்த்தாலும் வளர்கின்றது. மலையிடுக்குகளில் பாயும் ஓடைகளின் மூலம் தண்ணீர் வசதி பெற்று ஆங்காங்குத் தோட்டப்பயிர்கள் பயிர் செய்யப்பட்டுள்ளன. சில பகுதிகளில் கேழ்வரகு, சோளம், கூவைக்கிழங்கு (Arrow-root) தினை, சாமை ஆகியவை பயிரிடப்படுகின்றன, சில பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கும் பயிரிடப்படுகின்றது. சில பகுதிகளில் இலையுதிர்காடுகளும், பசுமை இலைக்காடுகளும் மண்டியுள்ளன. ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள லண்டானு புதர்ச் செடிகளின் வளர்ச்சி, இப்பகுதிக்குப் பசுமைத் தோற்றத்தை அளிக்கிறது. பல இடங்களில் காந்த இரும்புக் கனிகள் கிடைத்தாலும், இப்பகுதியில் காணப்படுகிற பள்ளங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் அடர்ந்த காடுகள் மண்டிக் கிடப்பதால், சிறிது தொலைவுக்கு மட்டுமே இந்த இரும்புக்கனிகள் புலப்படுகின்றன. வெண்மையான களி மண் போன்ற ஒரு வகையான மண்ணும் இங்கு காணப்படுகிறது. இவற்றில் 'பாக்சைட்' கலந்திருப்பதற்கான வாய்ப்பும் உண்டு. பெரிய வேட்டை விலங்குகள் இங்கு அரிதாகவே காணப்படுகின்றன. பண்டைய நாட்களில் இக்குன்றுகள் ஆனைக்குன்றுகள் எனவும் வழங்கப்பட்டு வந்தன. இப்போதெல்லாம் இங்கு யானைகள்



குறும்பக் கவுண்டன் ஜாகீரில் உள்ள பாச்சேரி கிராமம்.

காணப்படுவது மிகவும் அரிது. ஆனால் கரடிகளை ஆங்காங்கே காணலாம். புள்ளிமான்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகத் திரிகின்றன. காட்டுப் பன்றிகளும், குள்ள நரிகள் குழி முயல்கள் போன்ற சிறு வேட்டை விலங்குகளும் பொதுவாக ஆங்காங்கே உலவுகின்றன. இக் குன்றுகளில் வனப்பும் பொலிவும், வாய்ந்த மலர்களைக் கொத்தாகக் கொண்டு பூத்துக் குலுங்கும் எண்ணற்ற கொடிகளும் செடிகளும் மண்டிக் கிடக்கின்றன. இவ்வண்ண மலர்களின் வசீகரத்தால் கவரப்பட்டு ஏராளமான பறவை இனங்கள் இவ் வனங்களில் எழிற்காட்சியை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

### பழங்குடி மக்களின் பூர்வீகம்!

இயற்கையோடு இயைந்த வனப்பு மிக்க எளிய வாழ்க்கைச் சூழலில் வாழும் இம்மலைப் பகுதி மக்கள், பிற மக்களால் சுரண்டப்படுவது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது! மலையாளிகள் எனப்படும் இப்பகுதி வாழ் பழங்குடியினர் அடக்கத்தையும் அமைதியையும் விரும்பும் மக்களாவார்கள். அவர்கள் ஏதுமறியாதவர்கள், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். மொத்தத்தில் நேர்மையான குணம் படைத்தவர்கள். குறுநில மன்னர்கள் ஐந்து சகோதரர்களின் வழித் தோன்றல்கள் இவர்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் ஏறத்தாழ 16-வது நூற்றாண்டில் காஞ்சிபுரத்திலிருந்து இங்கு வந்து குடியேறி உள்ளூர்ப் பெண்டிரை மணந்து கொண்டு இம்மலைகளில் வாழ்ந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. இவர்கள் இந்து சமயத்தினரே என்றாலும், இவர்களது சமூகப் பண்பாட்டு நடைமுறைகள் மிகத் தெளிவாகப் பழங்குடி மரபினையே குறிப்பனவாகும்.

ஆண்கள், கோவணம் அணிந்து தங்களுக்கு மிக முக்கியமான அணியாகக் கருதி தலைப்பாகையைக் கட்டிக் கொள்கிறார்கள். பெரும்பாலும் அவர்கள் மேல் துண்டு அல்லது சட்டை அணிந்து கொள்கிறார்கள். பெண்கள் சேலை உடுத்துகின்றனர்.

### கொடுமையோ கொடுமை!

இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தும் ஜாகீர்தார்கள் பத்தாம் பசலித்தனமானவர்கள் என்றால் அது மிகையாகாது. ஜாகீர்தாரர்கள் மணம் ஆகாத ஆடவர் வரி, விதவை வரி, மேய்ச்சல் வரி போன்ற வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றும், பழங்குடியினரிடமிருந்து நன்கொடைகள் வாங்கியும் வருகின்றனர். இது, கொடுமை வாய்ந்த நிலப்பிரபுத்துவ முறையைப் புலப்படுத்துகிறது. இந்த ஜாகீர்தார்கள், மலையடிவாரப் பகுதிகளிலேயே வாழ்வதால் மலைப்பகுதி மக்களின் நலனில் எவ்வித அக்கறை

அதிக மகசூல் தரும் புதிய காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன.



யும் காட்டியதாகத் தெரியவில்லை. ஆண்டுக்கு ஓரிரு முறைதான் அவர்கள் மலைக்குப் போவார்கள். இவர்களின் அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளான நாட்டான்களும், மூப்பன்களும், கவுண்டன்களும், கங்காணிகளுமே இப்பழங்குடி மக்களிடம் வரி வசூலிக்கும் வகையில் ஏகபோக அதிகாரத்தைச் செலுத்தி வருகின்றனர். நாட்டான்களும், மூப்பன்களும் சில கிராமத் தொகுதிகளின் தலைவர்களாவர். கவுண்டன்களும், கங்காணிகளும் ஒவ்வொரு கிராமத்தையும் சேர்ந்தவர்களாவர். இத்தகைய ஏஜெண்டுகளிடம் சிக்கி ஆறுத் துயரையும், வேதனையும் இம்மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

பழங்குடியினர் சமூக விழாக்களுக்கும் சடங்கு, சம்பிரதாயங்களுக்கும் கணிசமான தொகையைச் செலவிடும் பழக்க முடையவர்கள். இதற்காக இவர்கள் அடிவாரப் பகுதிகளில் வசிக்கும் வட்டிக் கடைக்காரர்களிடம் கடன் வாங்குகின்றனர். இதற்கு வசூலிக்கப்படுகின்ற வட்டி வீதம் கடுமையானது மட்டுமல்ல. சில வேளைகளில் ஒருவர் எவ்வளவு கடன் கொடுத்தாரோ அத்தொகையைப் போல் நான்கு மடங்குக்கும் அதிகமான தொகைக்குக் கடன் பத்திரங்கள் எழுதி வாங்கப்படுகின்றன.

வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் அடிவாரத்திலிருந்து மலைப்பகுதிகளுக்கு வந்து, அம்மக்களிடம் தாம் கொடுத்த கடன்களைத் திருப்பிக் கொடுக்குமாறு வற்புறுத்துவதோடு, வாங்கிய கடனைத் திருப்பித் தரவில்லையெனில், பழங்குடி வாசிகளின் குடும்பப் பெண்களைத் தங்களுடன் அழைத்துச் சென்றுவிடுவதாகக் கூறப்படுகின்ற கொடுமை, சகிக்க முடியாததாகும். அது மட்டுமன்று. வட்டிக்குக் கடன் கொடுக்கின்ற சிலர், மேற்சொன்னவாறு மலைவாழ் மக்களிடம் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கையில் அவர்களால் திருப்பித் தரமுடியாவிட்டால், அந்த மலைவாழ் மக்களின் கண்முன்னாலேயே அவர்கள் வீட்டுப் பெண்களின் கற்பைச் சூறையாடும் அளவிற்கும் சென்றனர் என்றும் அதிகாரிகளிடம் அறிவிக்கப்பட்டது. இந்தக் கொடுமைக்கெல்லாம் காரணம் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத அவர்களது அவல நிலையேயாகும்.

இம்மலைவாழ் மக்கள் மிகவும் சுகாதாரக் கேடான சூழ்நிலையில் வாழ்கின்றனர். இக்காரணத்தால் இவர்கள் பல்வகைப்பட்ட நோய்கட்கும் இரையாகின்றனர். இவர்களது குழந்தைகளோ சத்துணவுக் குறைவால் நலிந்து மெலிந்து காணப்படுகின்றனர். சத்துணவுக் குறைகளினால் வளர்ச்சி குன்றுவதோடு, புரதக் குறைவால் ஏற்படும் நோய்க்கும் உடல் மெலியும் நோய் வகைக்கும் அவர்கள் ஆளாகின்றனர். இப்போது இங்கே குடிநீர், பள்ளிகள், மருத்துவ நிலையம், சாலைகள் போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகள் எவையுமே முற்றிலுமாகவே இல்லையெனலாம். இந்த மக்கள் யாவரும் அடிமை நிலைக்கும், கொத்தடிமை வாழ்வுக்கும் உட்பட்டு, குறிப்பாக ஒப்பந்தக்காரர்கள், இடைத்தரகர்கள் தயவில்தான் வாழ்ந்து வருகின்றனர்.

### புதுவாழ்வு தோன்றியது !

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு தமிழ்நாடு அரசு, இந்த ஏழைப் பழங்குடி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக ஆழ்ந்த அக்கறை காட்டியது. மலைவாழ் பழங்குடி மக்களின் வளர்ச்சிக்கான துணைத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்காக இப்பகுதி தெரிந்தெடுக்கப்பட்டது. இப்பழங்குடியினரின் நிலைமையை அறிவதற்காக குறும்பக் கவுண்டன் ஜாகீர் பகுதிக்கு, பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் குழுவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் 14-4-'76-ஆம் நாளன்று நேரில் சென்று பார்வையிட்டனர். கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்புச்) சட்டத்தின் விதித்துறைகள் எல்லாம் இப்பழங்குடி மக்களில் பல பிரிவினருக்குப் பொருந்துவதைக் கண்டு, அவர்களுக்குப் புது வாழ்வளிக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் இப்பழங்குடியினர் மலைப் பகுதியை விட்டுக் கீழறங்கி வர மறுத்தது ஒரு சங்கடமான நிலையை உருவாக்கியது. மலைப் பகுதி முழுவதும் நீதி மன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகளுக்குட்பட்டிருந்ததால். அவர்களுக்கு மலைப்பகுதிகளிலேயே புது வாழ்வு அளிக்க முடியாமல் இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர், மலைப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டபோது, மேற்படி மூன்று ஜாகீர்தாரர்

ஓம்

## அதிசய நீர் ஊற்று நிபுணர் !

1. குழாய் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும், (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்கவும்) குறிப்பிட்ட பூமியில் தெற்குத் திசையிலிருந்து வடக்கு நோக்கியும், மேற்கு திசையிலிருந்து கிழக்கு நோக்கியும் சென்று கொண்டிருக்கும் எல்லா நீர் ஊற்றுகளையும் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுகளிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள இரண்டு நீர் ஊற்றுகள் கிராஸ் செய்யும் சரியான இடம் கண்டுபிடித்துக் குறிக்கப்படும். நீர் ஊற்று உள்ள ஆழமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும் தெரிவிக்கப்படும்.

2. என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் போதுமான அளவு தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால், 2:3 என்ற விகிதத்தில் 3 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு—25 பைசா ஸ்டாம்பு அனுப்பவும்.

**கே. கந்தசாமி,**
**(Ex-Member of the British Society of Diviners, London)**
**நீர் ஊற்று நிபுணர்,**
**கணபதி அஞ்சல் கோயமுத்தூர்-6**

தொலைபேசி எண். 31912.



அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களும், மலிவு விலைத் துணிகளும் கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

களும் உடன் இருந்தனர். அவர்களுடன் விவாதித்த பின்னர், மேற்படி மூன்று ஜாகீர்தாரர்களும் இப்பகுதியின் மொத்த வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, மலைப் பகுதியில் தங்களுக்குச் சொந்தமாகவுள்ள எஸ்டேட்டுகளை அரசிடம் ஒப்படைத்து விடுவதாக அவர்கள் அறிவித்தனர்.

### மீண்டும் பயணம்!

மீண்டும் 22-6-76-ஆம் நாளன்று மாவட்ட ஆட்சித் தலைவர் சடையக் கவுண்டர் ஜாகீர் பகுதிக்குச் சென்றார். அவரோடு பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்றும் சென்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் முதல் தடவை சென்றதற்குப் பிறகு, பழங்குடிகளுக்கான துணைத் திட்டத்தின் கீழ் அப்பகுதியை மேம்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து அரசுக்கு அனுப்பி வைத்தார். இரண்டாம் தடவை சென்று வந்த பிறகு, 1976-'77-ல் நிறைவேற்றப்படுவதற்காகக் குறிப்பிட்ட சில திட்டங்களை எடுத்துக் கூறி, மீண்டும் செயற் குறிப்புகளை அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்தார்.

### பாத யாத்திரை பயன் தந்தது!

மாவட்ட ஆட்சித் தலைவரும் ஏனைய அதிகாரிகளும் அந்த மலைப் பகுதிகளுக்கு 9-8-'76-ஆம் நாளன்று பாதயாத்திரை சென்றனர்.

ஆரம்பத்தில் இம்மலைவாழ் மக்கள் அதிகாரிகளுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை. அவர்களைப் பேசச் செய்வதே பெரும் பாடாக இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 14-4-'76, 22-6-'76 ஆகிய நாட்களில் சென்றபோதுகூட அவர்களுடைய கஷ்டங்கள் பற்றி அவர்கள் வாய் திறக்கவில்லை. நாட்டான்களும், மூப்பன்களும் பக்கத்தில் இருந்ததால் அவர்கள் பேசத் தயங்கினார்கள். 9-8-'76 அன்று முதல் 23-8-'76 வரை மேற்கொள்ளப்பட்ட பாதயாத்திரையின்போது வேளாண்மைத் துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, கூட்டுறவுத் துறை, காவல் துறை, வனத் துறை, வருவாய்த் துறை ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்களுக்குக் கொத்தடிமை முறை (ஒழிப்புச்) சட்டம், தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம், 20 அம்சத் திட்டம் ஆகியவற்றின் பயன்களை எல்லாம் விளக்கியதுடன், இலவச மருத்துவச் சிகிச்சை அளித்தல், மண்ணெண்ணெய், சர்க்கரை, உப்பு, வெல்லம், கட்டுப்படுத்தப்பட்ட விலையுள்ள துணிகள், காய்கறி விதைகள் ஆகியவைகளை வழங்குதல் போன்ற பல்வேறு உதவிகளைச் செய்ததாலும், அப்பகுதியின் முன்னேற்றம் பற்றி விளக்கிக் கூறி அவர்களது நம்பிக்கையைப் பெற்றதாலும், மெல்ல மெல்ல அவர்கள், தங்களது துன்பங்களையும் துயரங்களையும் கூற ஆரம்பித்தார்கள். மின்சார ஜெனரேட்டர் உதவியால் அவர்களுக்குப் படக்காட்சி ஏற்பாடு செய்யப் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். செய்தித்துறையைச் சேர்ந்த தகவல் படங்கள் காட்டப்பட்டன. இதற்குப் பெரும் கூட்டம் சேர்ந்ததால், அம்மக்களைக் கவர்வது அதிகாரிகளுக்கு எளிதாக இருந்தது. அவர்களுக்கு அளித்த இலவச மருத்துவ வசதி, பழங்குடி மக்களிடையே பிரபலம் ஆயிற்று. 14 நாட்களில் 1,766 பேர் மருத்துவ வசதி பெற்றார்கள். ரூபாய் 3,635 மதிப்புள்ள மண்ணெண்ணெய், சர்க்கரை, உப்பு மலிவு விலைத் துணிகள் ஆகியவை பெற்றனர். பாத யாத்திரை சென்ற அதிகாரிகள் 67 கிராமங்களுக்குச் சென்று 7,000 பழங்குடி மக்களைச் சந்தித்தனர். மலைவாழ் மக்களை அதிகாரிகள் சந்தித்து, 'அவர்களுடைய கஷ்டங்களை அரசு தீர்த்திடும் என்றும், ஜாகீர்தார்களின் ஆட்கள் மற்றும் கடன் கொடுப்போர் ஆகியோரின் துன்புறுத்தலுக்கு இனிமேல் அவர்கள் ஆளாகத் தேவையில்லை என்றும் உறுதியளித்த போது, அம்மக்கள் தங்கள் கஷ்டங்கள் விலகுவதை உணர்ந்தார்கள்.

அவர்களுக்கு ஜாகீர்தார்கள் மீது அவ்வளவாக வெறுப்பு இல்லை. ஆனால் நாட்டான், மூப்பன், கடனளிப்போர், காட்டு ஒப்பந்தக்காரர்கள் ஆகியோர் மீதுதான் அவர்கள் அதிக வெறுப்புக் கொண்டிருந்தார்கள். ஜாகீர்தார்களின் சார்பில் அவர்கள் இம்மலைவாழ் மக்களைக் கொடுமைப்படுத்தினார்கள். ஆனால் மலைவாழ் மக்களிடம் இருந்து பெறும் தொகையில் குறைந்த அளவே ஜாகீர்தார்களுக்குக் கிடைத்து வந்துள்ளது. மீதியை ஜாகீர்தாரர்களின் ஏஜெண்டுகளே எடுத்துக்கொண்டுள்ளனர். இவ்வகையில் ஜாகீர்தாரர்களும் ஏமாந்துள்ளனர்.

9-8-'76 அன்று தொடங்கிய பாத யாத்திரையின்போது 2 ஜாகீர்தாரர்களும், மூன்றாவது ஜாகீர்தாரரான குறும்பக் கவுண்டனின் 2 மகன்களும் கல்ராயன் மலையின் குறும்பக் கவுண்டன் ஜாகீரில் உள்ள பாச்சேரி என்ற இடத்தில் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துத் தாங்கள் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்குகளை வாபஸ் வாங்கிக் கொள்வதாகக் கூறினார்கள்.

### வழக்கு முடிந்தது! வாழ்வு மலர வழி ஏற்பட்டது!

இதற்கிடையில் 13-8-'76-ஆம் நாளன்று கடலூர், துணை நீதி மன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜாகீர்தார்கள் மூவரும் கடலூர் துணை நீதி மன்றத்தில்

தங்கள் வழக்குகளை வாபஸ் வாங்கினார்கள்.

ஜாகீர்தாரர்களால் வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்ட செய்தி கேட்டு மலைவாழ் மக்கள் மகிழ்ச்சியுற்றனர். அரசாங்கத்தை எதிர்த்து வழக்காடுவதாகக் கூறி நாட்டான்களும் மூப்பன்களும் அம்மக்களிடம் பணம் பறித்து வந்தார்கள். வழக்கு நடத்துவதற்கான செலவுத் தொகைக்காக இனிமேல் ஜாகீர்தாரர்களுக்குத் தாங்கள் ஏதும் கொடுக்க வேண்டியதில்லை என்பதையும், அரசாங்கமே அவர்கள் சார்பில் தலையிட்டது என்பதையும், அறிந்து அவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அம்மலைகளில் முதன்முறையாக 15-8-'76 சுதந்திர தினத்தன்று தேசியக்கொடி ஏற்றப்பட்டது. மலைவாழ் மக்கள் அன்றுதான் முதன்முறையாக தேசியக் கொடியைப் பார்த்தார்கள். தேசியக் கொடியின் முக்கியத்துவம் பற்றி அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு இப்பகுதியில் சந்தன மரம், மாசிக்காய், யூகலிப்டஸ், மூங்கில் போன்ற காடுபடு பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. விலை மதிப்புள்ள மரங்கள், கடந்த ஆண்டுகளில், இடைத்தரகர்களாலும் ஒப்பந்தக்காரர்களாலும் ஏராளமாக வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. வழக்கு வாபஸ் பெறப்பட்டதும், காடுபடு பொருட்களின் போக்குவரத்தை நிறுத்துமாறு அதிகாரிகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. அவற்றின் போக்குவரத்திற்கு அனுமதிச் சீட்டுகள் வழங்க வேண்டாம் என்றும், அப்பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்குமாறும் வனத்துறைக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இந்த இடைத்தரகர்களுக்கு மூப்பன்கள், நாட்டான்கள், கவுண்டன்கள், கங்காணிகள் போன்ற பல பெயர்கள் உள்ளன. பழங்குடி மக்களைச் சுரண்டி வனவளத்தைக் கொள்ளையடிப்பதற்கு இவர்களே மூலகாரணம். இச்செயல்களை இவர்கள் நிறுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்களுக்குக் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.



தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பத்மநாபன் அவர்கள் 9-8-1976 அன்று கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்களில் பலருக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்கினார்.

### அரசின் திட்டம்!

வருவாய்த்துறை, காவல் துறை, வேளாண்மைத் துறை, மருத்துவத் துறை, நெடுஞ்சாலைத் துறைகளைச் சேர்ந்த சிறப்புப் பணியாளர்களை நியமித்து 17-8-'76-ல் அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது. நிர்வாகத்தின் பலன்களும் வளர்ச்சித் திட்டப் பலன்களும் இந்தப் பழங்குடி மக்களைச் சேரவும், 20 அம்சப் பொருளாதாரத் திட்டம், கொத்தடிமை முறை (ஒழிப்புச்) சட்டம் வேளாண்மைத் தொழிலாளர் தொடர்பான சட்டங்கள் இவற்றின் பலன்களை அவர்கள் அடையவும், அரசு, சிறப்புப் பணியாளர்கள் அடங்கிய ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்கியுள்ளது. இவ்வமைப்பு செயற் கேந்திரமாக விளங்கும்.

துணை ஆட்சித் தலைவரின் (சிறப்பு) தலைமையில் உள்ள இந்த நிர்வாக அமைப்பிலே தொடக்கத்தில் வருவாய், காவல், வேளாண்மை, மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த பணியாளர்கள் இருப்பார்கள். தேவைக்கேற்ப நாளடைவில் இந்த அமைப்பில் பணியாளர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும்.

1976-'77, 1977-'78-ஆம் ஆண்டுகளில் இப்பகுதியை மேம்படுத்த, பழங்குடி மக்கள் துணைத் திட்டத்தின் கீழ் 32 இலட்சம் ரூபாய் வேண்டுமெனக் கருதப்பட்டுள்ளது. நடப்பாண்டுக்காக பல்வேறு துறைகளிடமிருந்தும் செயற்குறிப்புகள் வந்துள்ளன. ஆணைகள் பிறப்பிக்கப்படுவதற்காகத் தற்போது அவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. பழங்குடி மக்கள் துணைத் திட்டத்தின்கீழ், சாலைகள், பள்ளிகள், பெண்களுக்கெனத் தையற்கூடங்கள், குழந்தைகளுக்கெனச் சிறுவர் பள்ளிகள், பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், செய்முறை விளக்கப் பாத்திகள், உழவர்களுக்கெனப் பயிற்சித் திட்டங்கள், உழவுக் கருவிகளையும் எரு முதலான இடுபொருள்களையும் இலவசமாக வழங்குதல், பழங்குடி மக்களுக்கு தேனீ வளர்க்கும் பெட்டிகள் வழங்குதல், மண்வளப் பாதுகாப்புப் பணிகள், தடுப்பு அணைகள் கட்டுதல், கிராம மருந்தகங்களைத் தொடங்குதல், இம்மருந்தகங்களை நாளடைவில் ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றுதல், புறக்கடைக் கோழிப் பண்ணைகள், ஆடுகள் இவற்றை வழங்கிட பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பயிர் செய்வதை இடத்திற்கு இடம் மாற்றும் பழக்கத்தைத் தடுத்து நிறுத்தவும், நிலைத்த சாகுபடி வசதிகள் உள்ள இடங்களில் குடும்பங்களைக் குடியமர்த்தவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### ஒளிமயமான எதிர்காலம் உருவாகியது!

இப்பணிகள் எல்லாம் இம்மலைப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்கும். இப்பகுதியில் வளர்ச்சியும், வளமும் பெருக்கச் சிறப்புப் பணியாளர்களை நியமித்திட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் இப்பகுதியின் மேம்பாட்டிற்கான மிகப் பெரிய முன்னேற்றப் பணியாகும். இவ்வாறு கல்ராயன்மலையில் வாழும் பழங்குடி மக்களுக்கு இன்ப வாழ்வு கிடைத்திட எல்லாவிதத்திலும் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது.

# உழவர் பெருமக்களுக்கு உதவும் செய்திகள்

### 1. வெங்காயமும் கந்தகமும்:

மண்ணில் கந்தகம் கலந்திருப்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் கரிசல் மண்ணில் கந்தகம் அதிக அளவில் உள்ளது. மண்ணிலுள்ள 'பாஸ்பாரிக்' அமிலம், தாவரக் கரிமப் பொருள் ஆகியவையோடு கந்தகத்திற்கு ஈடுபாடு உள்ளது. வெங்காயம் கந்தகச் சத்தை அதிகமாக உட்கிரகிக்கிறது. எக்டருக்கு 20 கிலோ கந்தகம் இடுவதால் வெங்காயத்தின் மகசூல் அதிகரிக்கிறது எனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### 2. வேளாண்மை ஆலைக்கழிவுகளால் பயன் உண்டா?

வேளாண்மையிலும், தொழிற்சாலைகளிலும் பல கழிவுப் பொருள்கள் விரயமாகின்றன. குறிப்பாக நிலக்கடலைத் தோல், கரும்புச்சக்கை, 'மக்னசைட்' கழிவு, உருக்காலைக் கழிவுகள் ஆகியவை ஆகும். இவைகள் வேளாண்மைக்கு உபயோகப்படுமா என ஆராய்ந்ததில் கரும்புச் சக்கை விவசாயத்திற்குப் பயன்படும் எனக் கண்டுபிடித்துள்ளார்கள். கரும்புச் சக்கையைக் கரிசல் மண், வண்டல்மண், செம்மண் ஆகியவற்றிற்கு இடுவதால் பூமியில் நீர் தாங்கும் தன்மையும், நீர் கடத்தும் தன்மையும் அதிகரிக்கிறது.

### 3. யூரியாவைப் பூச்சி மருந்துகளுடன் கலக்கலாமா?

யூரியாவை இலை வழியாகப் பயிர்களுக்கு அளிப்பது உங்களுக்குத் தெரிந்ததே. பூச்சி, பூஞ்சாள மருந்துகளுடன் கலந்து தெளித்தால், செலவு குறையும். ஆதலால் எந்தப் பூச்சி மருந்துடன் யூரியாவைக் கலந்து தெளித்தால் தழைச்சத்துக் குறையாமல் பயிருக்குக் கிடைக்கும் என ஆராய்ந்ததில், 'எண்டோசல்பான்', 'கந்தகம்' 'காப்பர் ஆக்ஸி குளோரைடு' ஆகிய மருந்துகளுடன் யூரியாவைக் கலந்தால் இரசாயன மாற்றம் ஏதும் இல்லை. 'என்டிரின்' 'பி. எச். சி.', 'டிடிட', 'டாக்ஸாபீன்' மருந்துகளுடன் யூரியாவைக் கலந்தால் இரசாயன மாற்றம் ஏற்பட்டுப் பயிர்களுக்கு யூரியா மூலம் தழைச்சத்துக் கிடைப்பதில்லை எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### 4. பருத்தி நூற்புழுவைக் கட்டுப்படுத்த வழிமுறை:

பருத்தியை நூற்புழுக்கள் தாக்குகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த நடத்திய ஆராய்ச்சியில் 'ஃபென்சல்ஃபோதியான்', 'கார்போஃப்யூரான்', 'போரேட்' குருணைகள் அளிப்பதும், 'கார்ப்போஃப்யூரான்' (8 சதம் ஊக்கச் சத்து) கொண்டு விதைகளைக் கலப்பதும் நூற்புழுக்கள் தாக்குதலை வெகுவாகக் குறைக்கின்றன எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### 5. பருத்திப் பயிருக்கு அசட்டோபாக்டர்:

பருத்தி விதைகளுடன் 'அசட்டோபாக்டர்' நுண்ணுயிர்க் கிருமிகள் கலந்து விதைப்பதால், இலாபமா எனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினரால் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு. தழைச்சத்தைப் பல்வேறு அளவுகளில் இட்டு 'அசட்டோபாக்டர்' உபயோகித்து நடத்திய சோதனையில், 'அசட்டோபாக்டர்' தழைச்சத்துடன் கூட்டாகச் செயல்படும்போது குறைந்த செலவில் அதிக இலாபம் அடையலாம் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தழைச்சத்தில் 75 சதத்தை நிலத்தில் இட்டு, விதையை அசட்டோபாக்டரில் நேர்த்தி செய்தால் எக்டருக்கு 1,336 கிலோ பருத்தி மகசூல் கிடைக்கிறது. இவ்வாறு, அசட்டோபாக்டர் கலந்து பருத்தி சாகுபடி செய்வதால் எக்டருக்கு 25 சதத் தழைச்சத்து மிச்சமாகிறது. குறைந்த தழைச்சத்து இட்டு, அதிக இலாபம் அடையலாம்.

### 6. மானாவாரிக்கேற்ற ராகி இரகம்:

தர்மபுரி மாவட்டத்தின் மானாவாரிப்பகுதிக்குப்-பொருத்தமான ராகி இனத்தைத் தேர்வு செய்ய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினரால் இனத்தைத் தேர்வு செய்யத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினரால் இம்மாவட்டத்தில் உள்ள காவேரிப்பட்டினம் ஆராய்ச்சி நிலையத்தில் .பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 13 இரகங்களைக் கொண்டு மானாவாரியில் நடைபெற்ற வகைத் தேர்வில், ''சாரதா'' இரகம் மிக அதிகமான விளைச்சலாக எக்டருக்கு 1,065 கிலோ தருவது அறியப்பட்டது. இம்மகசூல், தரமான 'கோ. 10' ரகத்தைவிட 14 சதம் கூடுதல் விளைச்சல் ஆகும்.

சாரதா இரகத்தின் வயது 110 நாட்களாகும். இதற்குத் தேவையான விதை அளவு-எக்டருக்கு, வரிசையாக விதைப்பதானால் 12 கிலோவும், கைவிதைப்பிற்கு 15 கிலோவும் ஆகும். இதனுடன்





வகைகளை விதைக்கலாம். கை விதைப்பில் 8 அடிக்கு ஒரு வரிசையாகக் கலப்புப் பயிர் விதைக்கலாம். ராகியைத் தனிப்பயிராக விதைக்கும்போது, பயிருக்குப் பயிர் 15 செ. மீ. இடைவெளி விட்டு விதைப்பது அவசியம். 'சாரதா' ராகி இனத்தை மானாவாரியில், நடப்புப் பருவத்தில் உழவர்கள் பயிரிட்டுப் பலன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## 7. குறைந்த உரத்தில் நிறைந்த நிலக்கடலை மகசூல்!

ஆழியாறு வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையில், நிலக்கடலைக்குத் தேவையான உரங்களின் அளவுகளும், 'போராக்ஸ்' சுண்ணாம்புச் சத்துக்களின் பயனையும் கண்டறிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களை அதிக அளவில் அளிப்பதினால் நிலக்கடலையின் மகசூலில் எந்த வகையிலும் வேறுபாடு இல்லை என்றும் 'போராக்ஸ்' மற்றும் சுண்ணாம்புச் சத்துக்களின் சேர்க்கையினால் மகசூலில் எவ்விதப் பயனும் இல்லை என்றும், கடந்த நான்கு ஆண்டு ஆராய்ச்சி முடிவுகளில் இருந்து அறியப்பட்டது.

எனவே, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டப்பகுதியில் நிலக்கடலைக்கு எக்டருக்கு 15:30:45 கிலோ என்ற விகிதத்தில் முறையே தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களை உபயோகிப்பது போதுமானது.

## 8. குறைந்த செலவில் காகிதம் தயாரிக்கப் புதிய அடிப்படைப் பொருள்!

காகிதத் தயாரிப்பிற்கு உகந்த செல்லுலோஸ் எந்தச் செடிகளில் இருக்கின்றது என்பதை அறியத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினரால் பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. காகிதத் தயாரிப்பிற்குப் பல செடி வகைகள், புல்வகைகள், தானியப்பயிர்களின் தட்டு வகைகள், மற்றும் சூரிய காந்தி புளிச்சை, பருத்தி மார்கள் ஆகியவற்றின் செல்லுலோசைப் பயன்படுத்துவது பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

கம்புநேப்பியர் புல், 'எச். பி. 21' என்ற ரகம் காகிதத் தயாரிப்பிற்கு ஏற்றதெனவும், யூக்கலிப்டஸ், மூங்கில் போன்றவையுடன் இதைக் காகிதத் தயாரிப்பிற்குப் பயன்படுத்தலாம் என்றும் அறியப்பட்டது.

## 9. பயறுகள் வண்டுகளால் தாக்காமல் இருக்க எளிய காப்பு முறை :

சாதாரணமாக வீட்டில் வைத்திருக்கும் உளுந்து, பாசிப்பயறு, மொச்சை போன்ற விதைகளைப் பலவிதப் பூச்சிகள் தாக்குகின்றன. முக்கியமாக ஒருவகை வண்டு, அவைகளை மிகவும் சேதப்படுத்தி முடிவில் மாவுபோல் ஆக்கிவிடும். இவைகளை நாம் உண்பதற்காக உபயோகப்படுத்துவதால் பூச்சி கொல்லி மருந்தைக் கலக்கிவைக்க இயலாது. ஆகவே, வீட்டில் உபயோகப்படுத்தும் பயறு வகைகளை வண்டுகள் தாக்காமல் இருக்க, பழக்கத்தில் இருக்கும் சிலவகை எண்ணெய்களைக் கலக்கி வைத்து ஆய்வு நடத்தப்பட்டது. இதன் முடிவுகளின்படி பயறு வகைகளை வேப்பெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் ஆகியவைகளில் ஏதாவது ஒன்றைக் கலந்து வைத்திருந்தால், நீண்ட நாட்களுக்கு வண்டுகள் தாக்காமல் காக்க முடியும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் எண்ணெய் கலந்தால் போதுமானது. எண்ணெய் கலந்த விதைகள் பூச்சிகளுக்கு வழுக்குவதால், அவற்றின் மேல் முட்டைகள் இட முடியவில்லை. வண்டு அரித்துச் சேதம் விளைவிக்க முடியவில்லை. இந்த எளிய முறையில் பயறுகளைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கலாம்.

## 10. பருத்தியில் மகசூலைப் பெருக்கப் புதியதோர் வழி !

பருத்தியில், குறைந்த செலவில், அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிக்கத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பல்வகைப்பட்ட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பருத்தி விதைகளை 'சக்சினிக்' அமிலத்தில் (SUCCINIC ACID) ஊற வைத்து விதைப்பதனால் பருத்தி மகசூலைப் பெருக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 0.1. சதம் (1 கிராம் 1 லிட்டர் தண்ணீர்) திறனுள்ள 'சக்சினிக்' அமிலக்கரைசலைத் தயார் செய்து அதில் பருத்தி விதைகளை 6 மணி நேரம் ஊறவைத்த பிறகு விதைகளை விதைக்க வேண்டும். இவ்வாறு ஊற வைக்கப்பட்டு விதைத்த நிலத்தில், எக்டருக்கு 1.541 கிலோ பருத்தி மகசூல் கிடைத்தது. இம்முறையைப் பின்பற்றாமல், நடப்பில் உள்ள முறைப்படி விதைத்ததில் எக்டருக்கு 1,321 கிலோ மட்டுமே கிடைத்தது. இந்த 'சக்சினிக்' அமிலத்தின் விலை மிகவும் குறைவாகும். 100 கிராம் 'சக்சினிக் (அமிலம் சுமார் ரூ. 3/- ஆகும். உழவர் பெருமக்கள் 'சக்சினிக்' அமிலத்தில் பருத்தி விதைகளை ஊற வைப்பதன் மூலம் சுமார் 17 சதம் அதிகமான மகசூலை அடையலாம்.

நன்றி : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோவை-3.

# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்!
# நியாயமான விலைகள்!



கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,
## அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்
## படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
## லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

கோ-ஆப்டெக்ஸ்
## துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

பதிவு எண். M. 8676



# வாழ்வு மலர
# வளம் பெருக
# 20 அம்சத்திட்டம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.